# நானும் ஒரு TATA

சோம. நாகலிங்கம் இ.வ.ப (ஓய்வு)



நிகில் ஃ பவுண்டேஷன்

NIKHIL FOUNDATION





# நிகில் ஃ பவுன்டேஷன்

(அதி உன்னத செயல்பாட்டிற்காக
இளைஞர்களை வல்லமைப் படுத்தும் அமைப்பு)

## இயக்கக் கூற்று

இந்திய இளைஞர்களின் அதி உன்னத செயல்பாட்டிற்காக அவர்களுக்கு வாழ்க்கைத் திறன் பயிற்சி அளித்து அதன் மூலம் அவர்கள் தன் முனைப்போடும். வலிந்து செயலாற்றும் செயல்திறனுடனும். நல்ல குடிமக்களாகவும் செயல்பட்டு இந்த உலக அமைதிக்காக அவர்கள் மூலம் பாரதத்தை முன்னிறுத்த விழையும் இயக்கம்.

Mission Statement:

By training the youth of India in the field of life skill education to empower them towards excellence and performing their role with initiative and pro-activity and with good citizenship to make India as a front runner in bringing out world peace.

## வாழ்க்கைத் திறன் பயிற்சி

அதி உன்னத செயல்பாட்டிற்காக மாணவர்களை வல்லமைப் படுத்தும் ஒரு நிகழ்ச்சி

அரசு. மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கோர் அரிய வாய்ப்பு.
9.10.11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு
உன்னை நீ அறிவாய். இலக்கு அமைத்தல். திறன்மிகு தொடர்பாற்றல்.
மனிதநேயம் மற்றும் நினைவாற்றல் என்ற 5 தலைப்புகளில்
தேர்ந்த பயிற்சியாளர்களைக் கொண்டு ஒரு நாள் முழுவதும் சீரிய பயிற்சி
இலவசமாக வழங்கப்படுகின்றது.
03.11.2007ல் ஆரம்பித்து இதுவரை 705 பள்ளிகளில் 2,75,000 மாணவர்களுக்கு
இந்தப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

விரும்பும் பள்ளிகள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி


**நிகில் ஃபவுன்டேஷன்.**

1/759, நக்கீரர் தெரு, பாரத் நகர்,
திருப்பாலை, மதுரை – 14 செல் பேசி 9003659270

email : nikhilfoundation.eyte@gmail.com website: www.nikhilfoundation.co.in


**Contributions to the foundation is exempted U/S 80 G of I.T.Act**

**CIT Order C.No. 464/538/2007-08 dated 06.05.08**

# நானும் ஒரு TATA

**சோம. நாகலிங்கம்** இ.வ.ப (ஓய்வு)

வெளியீடு

**நிகில் ஃ பவுண்டேஷன்**

மலரின் நிகிலகம்

1 / 759, நக்கீரர் தெரு,

பாரத் நகர், திருப்பாலை, மதுரை 14

# நானும் ஒரு TATA

ஆகஸ்ட் 2024

முதல் பதிப்பு 2024

@ அனைத்து உரிமையும் ஆசிரியருக்கே

கரு கொண்டு வடிவமைத்தது
**சோம. நாகலிங்கம்** இ.வ.ப (ஓய்வு)
நிறுவனர் மற்றும் தலைமைப் பயிற்சியாளர்,
நிகில் ஃ பவுண்டேஷன்

வடிவமைப்பு
அ. சுவக்கின் மரியநாதன்

வெளியீடு
**நிகில் ஃ பவுண்டேஷன்**
மலரின் நிகிலகம்
1/759, நக்கீரர் தெரு,
பாரத் நகர், திருப்பாலை, மதுரை 14
அலைபேசி 9003659270

**விலை ரூ 120**

வியாபார நோக்கில் அல்லாது சேவை நோக்கில்
இந்த கையேட்டில் கூறப்பட்ட விஷயங்களைப் பயன்படுத்திக் கொள்ள
ஆசிரியரின் எழுத்துப்பூர்வ அனுமதி தேவையில்லை.
மூலத்திற்கான அங்கீகாரம் கொடுத்தால் மகிழ்வோம்



# ஆசிரியர் உரை

பொருளாதார சுதந்திரம் முக்கியம் என்று வெள்ளையர்களின் நிறுவனங்ளை எதிர்த்துக் கப்பல் கம்பெனி நடத்திய வ.உ.சி அவர்கள் தொழில்முனைவோர்களுக்கு ஒரு முன்னுதாரணம். அடிமைப் பட்டு இருந்ததாலோ என்னவோ கல்வியில் நல்ல தேர்ச்சி பெறுபவர்கள் அனைவருமே ஏதோ ஒரு நிறுவனத்தில் அல்லது அரசாங்கத்தில் சிறியதோ அல்லது பெரியதோ ஒரு வேலை என்று திருப்திப் பட்டு விடுகின்றனர்.

தகுதியிருந்தும் சொந்தமாகத் தொழில் தொடங்குவது என்பது நம்மில் பலருக்குக் கானல் நீர். வேலையை வைத்து யாரோ ஒருவரிடம் அடிமையாகப் பணி செய்வது என்பது யதார்த்தம். இந்த நிலையை மாற்றத் தான் அரசாங்கம் நிறைய ஊக்குவிக்கும் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. வியாபார நிர்வாகப் பள்ளிகள் இந்தியா முழுக்க இருந்தாலும், அவர்களும் பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு நிர்வாகிகளாகத்தான் வேலைக்குப் போகின்றார் களே ஒழிய தொழில் முனைவோர்களாக மாறுவதில்லை.

விருதுநகர் சுழற்சங்கமும் பஞ்ச் குருகுலத்துடன் இணைந்து இதை ஒரு வேள்வியாக ஏற்று மாணவர்களைத் தொழில் முனைவோராக மாற்றத் தொடர்ந்து பயிற்சிகள் நடத்திக் கொண்டிருப்பது பாராட்டத் தக்கது.

**N.A.** இராமச்சந்திரன் அவர்களின் நூற்றாண்டுப் பிறந்த நாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக மற்றும் அவரது நினைவால் பதின்மப் பருவ மாணவர்களைத் தொழில் முனைவோராக ஊக்கப்படுத்தி அவர்களை ஆற்றுப் படுத்தலாமே என்று அன்னாரின் பெயரன்கள் மற்றும் பெயர்த்திகள் நினைத்ததன் பலனாகத்தான் இந்தக் கையேடு உங்கள் கைகளில் தவழ்கின்றது.

எனக்கும் நெடுங்காலமாக இந்த ஆதங்கம் உள்ளது. PMRY திட்டத்தின் கீழ் பல்லாயிரம் இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்த அனுபவம், இந்திராகாந்தி திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தில் யுக்தி நிர்வாகம் என்ற பாடத்தை மாணவர்களுக்கு நடத்தியது மற்றும் பணிக்காலம் முழுவதும் ஒரு மத்திய கலால் துறை அதிகாரியாக, சரக்கு மற்றும் சேவை வரி அதிகாரியாக, உற்பத்தி யாளர்களுடன், வணிக சேவை புரிபவர்களுடன் பழகியது இந்தக் கையேட்டினை எழுத உதவியது. தொழில் முனைவோர்களை உருவாக்கவேண்டும் என்ற எனது ஆதங்கத்தின் வெளிப்பாடுதான் இந்தக் கையேடு.

ஆக்கமும் ஊக்கமும் தந்த நிகில் குழந்தைகள், அறக்கட்டளையின் இயக்குனரும் கோட்டக் மகிந்திரா வங்கியின் தமிழ்நாடு மற்றும் கேரளா வட்டாரத்தின் பயிற்சி மேலாளரும் எங்கள் தவப்புதல்வனுமான நிகில் சவுந்தர், மருமகள் ஜெயப்பிரிய ஹர்ஷினி, அன்புப் பேத்தி அரசி, ஒன்றுமில்லாத நிலையிலிருந்து உச்சத்திற்குச் சென்று கொரோனா காலத்தில் பாதாளத்தையும் பார்த்து ஒரு பீனிக்ஸ் பறவை போல மீள முயன்று கொண்டு தனது வாழ்வையே எனக்குப் பாடமாகக் கூறிக்கொண்டிருக்கும் நிகில் குழந்தை பாண்டியராஜனுக்கும் எனது நன்றிகள் பல. வழக்கம் போல இப்புத்தகத்தை சிறப்பாக வடிவமைத்திருக்கும் கெழுதகை நண்பர் சுவக்கின் மரியநாதன் அவர்களுக்கும் நன்றிகள் பல.

வேறு எந்த அச்சகமும் தராத சலுகை விலையில் நிகில் அறக்கட்டளைக்கு எப்பொழுதும் புத்தகம் அச்சடித்துக் கொடுக்கும் ஜேம்ஸ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ் நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இதற்கு அடிநாதமாக உள்ள திரு, அஜய் கார்த்திக் ராஜா அவர்களின் அன்பிற்கும் இது குறித்தான உத்வேகத்திற்கும் நன்றிகள் பல.

**சோம. நாகலிங்கம் IRS**
நிறுவனர் மற்றும்
தலைமைப் பயிற்சியாளர்,
நிகில் அறக்கட்டளை, மதுரை



# முகவுரை

பசித்தவனுக்கு மீன் துண்டினைக் கொடுத்து உதவுவதை விட மீன் பிடிக்கத் தூண்டிலைக் கொடுத்து அதற்கான பயிற்சியினையும் கொடுப்பதே ஆகச் சிறந்த சேவையாகும் எனும் தார்மீகக் கோட்பாட்டினைக் கற்றுத் தந்த ஜேசி அமைப்பினில் பயணிக்க ஆரம்பித்த பொழுது எனக்குக் கிடைத்த ஆத்ம நண்பர் ஜேசி நிகில் நாகலிங்கம். அன்று முதல் இன்றுவரை தொய்விலாத் தொடர் நட்புடன் என்னுடன் பழகி வரும் நண்பர் நாகலிங்கம் ஒரு ஜேசித் தலைவராகச் செயல்பட்டுச் சாதித்ததை விட ஒரு பயிற்சியாளராக நிலைநிறுத்தி அர்ப்பணிப்பு உணர்வுடன் நிகில் அறக்கட்டளை எனும் மாணவர்களுக்கான பயிற்சி அமைப்பினை போற்றுதலுக்குரிய வகையில் நிகழ்த்தி வருகின்றார். எனது பாராட்டுக்களையும், வணக்கத்தினையும் சமர்ப்பிக்கின்றேன்.

பயிற்சியாளர்கள் அனைவரும் எழுத்தாளர்கள் ஆவதில்லை. ஆனால் நண்பர் நாகலிங்கம் தொடர்ந்து எழுமின் விழிமின், வல்லமை காணீர் பாகம் 1 மற்றும் 2, மெமரி மேஜிக், அவைத்தலைமையும் பாராளுமன்ற நெறிமுறைகளும், பார்வையின் பரிமாணங்கள், முரண்பாடுகள் சமன் செய்வோம், அகம் 5 புறம் 5, நெற்றிக்கண், பேஷா பேசலாம், இல்லறமே நல்லறம், மனசா புத்தியா என்று தமிழிலும்,

Empower to Excel, Millennium Memory Power, CAP, LAP, Speech Craft, Chairmanship and Parliamentary Procedure, Relax Please, Third Eye, Optical Dimensions, Be Better, Empower Thyself Part I & II என்று ஆங்கிலத்திலும் தனது படைப்புகளை ஆக்கம் செய்து வெளியிட்டுள்ளார். அவ்வரிசையில் அவரது தற்போதைய படைப்பு இந்த அரிய நூல்.

பஞ்ச் குருகுலப் பயிற்சியாளர்கள் மூலமாக ரோட்டரி மாவட்டம் 3212ன் முன்னாள் ஆளுநர் Rtn. AKS V.R.முத்து அண்ணாச்சி அவர்கள் நடத்தி வரும் RYLA BE AN ENTREPRUNEUR பயிற்சித் தொடரில் கடந்த மூன்று ஆண்டுகாலத்திற்கும் மேலாகப் பங்கெடுத்து வரும் அனுபவத்தோடு இந்நூலைப் படித்தேன்.

இந்நூல் மேல் நிலைப் பள்ளிப் பருவத்திலேயே இளையோரைத் தொழில் முனையும் ஆர்வத்தைத் தூண்டக்கூடிய வகையில் ஆற்றுப்படுத்தப் பட்டுள்ளது. இளைஞர்கள் லட்சக்கணக்கில் வேலை தேடி அலையும் போக்கினை மடைமாற்றி ஒவ்வொருவரும் பிறர்க்கு வேலை வாய்ப்பினைத் தர ஆயத்தம் செய்யப் பிரயத்தனம் மேற்கொண்டுள்ளார். இந்த நோக்கமே நூலின் பின்னல்களாகப் பக்கம் பக்கமாய்ப் பாவப்பட்டுள்ளது.

இளைஞர்களிடையே தன்னம்பிக்கை, தைரியம், தெளிவு, புதுமைச் சிந்தனை, மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றல் முதலான அடிப்படைத் திறன்களைப் பக்கம் பக்கமாய் இந்நூல் வலியுறுத்துகின்றது. நாம் வாசிக்கும் எத்தனையோ மேலைநாட்டு நூலாசிரியர்களின் தனிமனித மேம்பாட்டு நூல்களில் மேலை நாட்டுச் சாதனையாளர்கள் மட்டுமே முன்னுதாரணமாகச் சொல்லப்பட்டிருப்பார்கள்.

ஆனால் நண்பர் நாகலிங்கம் இந்திய அளவிலும், தமிழக அளவிலும் தொழில் செய்து ஜெயித்துக் கொண்டிருக்கும் வெற்றி யாளர்களை மேற்கோள் காட்டி எழுதியுள்ளார். தொழிலதிபர் N.A.இராமச்சந்திர இராஜா அவர்களின் பெயரன்கள் மற்றும் பெயர்த்திகள் இப்படைப்புக்கு ஆதரவு தந்துள்ளமைக்கு எனது வணக்கங்களைத் தெரிவிக்கின்றேன்.

ஆசிரியர், ‘பணிசார் அடிமை’ என்ற சொற்பிரயோகம் மூலம் வேலைக்குச் செல்லும் இளையோர் மனநிலையை செல்லமாகக் கண்டிக்கின்றார். வேலைக்குச் செல்வது தவறில்லை. எத்தனை தொழில் முனைவோர்கள் தோன்றினாலும் அவர்களிடம் வேலை செய்யும் நபர்கள் இல்லாமல் தொழில் முனைவு சாத்தியம் இல்லை. ஆனால் தொழில் துவங்கி ஜெயித்துக் காட்டும் வல்லமை தன்னிடமும் உண்டு எனும் சுயம் அறியாமல் மழுங்கி விடக் கூடாதே என்ற ஆற்றாமை ஆசிரியரின் எழுத்துக்களாக உருப்பெற்றுள்ளன.

*அன்பு அறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்*
*நன்குடையான் கட்டே தெளிவு*

எனும் வள்ளுவரின் வரிகள் 18-வது பக்கத்தில் அறிவு, இலாவகம் அல்லது மென்திறன் மற்றும் மனோபாவம் என்ற சொற்களால் வலியுறுத்தப் பட்டுள்ளது.

*முறைப்படிச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்*
*திறப்பாடு இலாதார்*

எனும் குறளுக்கிணங்க எண்ணற்ற பட்டதாரி இளைஞர்கள் நல்ல வணிகத் திட்டங்களைத் தம்மிடம் வைத்திருந்தாலும் அவற்றை நிகழ்த்தக் கூடிய வகையும், வழியும், அறியாமல் திசை மாறிச் சென்றுவிடுகின்றனர். அத்தகைய இளையோர்களுக்கு இந்நூல் படிப்படியான வழிமுறைகளையும், வாய்ப்புகளையும் சுட்டிக் காண்பிக்கின்றது. அத்துடன் ஒவ்வொரு இளைஞரும் தனக்குள் இருக்கும் தொழில் முனைவுத் தகுதியான சுய ஆய்வு செய்து கொள்ளும் வகையில் 26 மற்றும் 27ஆம் பக்கத்தில் சுய ஆய்வுக் கேள்விகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

குறிப்பாகப் பெண் தொழில் முனைவோருக்கான அரசுத் திட்டங்களை ஆசிரியர் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். தொழில் முனைவோரின் பண்பு நலன்கள் அவர்களுக்குத் தேவையான மென் திறன்கள் மற்றும் யுக்திகள் ஆகியவற்றை நல்ல உதாரணங்களுடன் வகைப் படுத்தியுள்ளார்.

*கைத் தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்*
*கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்* என்றார் நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்

இந்நூல் இளையோர் எதிர்காலத்திற்கான ஆசிரியரது அக்கறையின் வெளிப்பாடு மட்டுமல்ல இது இந்த நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தின் அக்கறை வெளிப்பாடாகவும் பார்க்கின்றேன்.

மாணவர்கள் இந்நூலை நன்கு படித்துத் தெளிவு பெறவேண்டும் என வலியுறுத்துகின்றேன். தொழில் முனைவோர் வழிமுறை பற்றிய புதிய முன்னெடுப்பாக இந்நூல் சிறப்புப் பெற்றுள்ளது.

*நண்பர் நாகலிங்கம் அவர்கள் இன்னும் பல ஆக்கங்களைத் தரவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

**PG. *க.சி. குருசாமி***
*பொருளாளர்*
*பஞ்ச் குருகுலம் அறக்கட்டளை*
*மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர்*
*தொழில் முனைவோர்*



# மதிப்புரை

நானும் ஒரு டாட்டா என்ற இந்தப் புத்தகம் மிக அருமையாக வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. எந்த ஒரு நாடும் முன்னேறு வதற்கான வழிமுறைகளில் மிக முக்கியமான வழி, தொழில் மற்றும் வாணிபம் மற்றும் வியாபாரத்தை அதிகரிப்பது தான்.

இந்தப் புத்தகத்தில் நிறைய வெற்றியாளர்களின் கதைகள் சொல்லப்பட்டிருக்கின்றது. அதன் மூலம் தொழில் முனைவதற்கான தூண்டுகோலாக இந்தப் புத்தகம் அமைந்திருக்கின்றது. மேலும் ஒரு தனிநபர் தொழில்முனைவோர் மற்றும் தொழிலதிபர் ஆவதற்கான தகுதிகளை வளர்த்துக் கொள்ளவும் வழிகாட்டியாக இருக்கின்றது. சுருங்கச் சொன்னால் இந்தப் புத்தகம் பலருடைய வாழ்க்கையை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கான ஒரு சிறந்த கையேடாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவின் வருங்காலம் இளைஞர்கள் கையில் என்ற இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி ஐயா அப்துல்கலாம் அவர்களின் கருத்துப்படி, இளைஞர்களை வல்லமைப்படுத்திக் கொண்டிருக்கும் இந்த நூலாசிரியர், அப்பா நாகலிங்கம் அவர்கள் மற்றும் நிகில் புவுண்டேஷனின் இந்தப் புதிய முயற்சி நிச்சயமாக இளைஞர்களின் வாழ்க்கையை மாற்றி அமைக்கும். நிகில் பவுன்டேஷன் மற்றும் அப்பா நாகலிங்கம் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**இராதா அஸ்வத்**
இயக்குனர்,
அக்ரிபிளாஸ்ட் கம்பெனி,
வில்லாபுரம், மதுரை

## இம்முயற்சிக்குத் துணைநின்றவர்கள்...

Sri. P. A. Kumaraswamy Raja @ Venketesh
Smt. Radhalakshmi Sridhar
Sri. P. A. Ramasubramina Raja @ Raju
Sri. N. S. Sriram Kumar Raja
Sri. N. S. Satish Kumar Raja
Sri. N. A. Ajay Karthik Raja
Smt. Shyamala Satish
Sri. Aditya Shivaram Raja
Sri. N. S. Sanjay Kumar Raja
Smt. Rajshree Pradeep
Sri. N. K. Ramvishnu Raja
Sri. N. K. Ramvenkat Raja
Sri. N. S. Sandru Raja

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகப் படலம் | 13 |
| 1.1 | தொழில் முனைவின் இன்றைய நிலை | 14 |
| 1.2 | பணிசார் அடிமை மனோபாவம் | 18 |
| 2. | தொழில் முனைவு | 23 |
| 2.1 | தொழில் முனைவோர் | 25 |
| 2.1.1 | தொழில் முனைவோராகத் தகுதியானவரா நீங்கள்? | 26 |
| 2.2. | வயது ஒரு தடையா? | 28 |
| 2.3 | தொழில் முனைவோர் வகைகள் | 30 |
| 2.4. | மகளிர் தொழில் முனைவோர்கள் | 31 |
| 2.5 | பெண் தொழில் முனைவோருக்கான அரசு ஏற்படுத்தித் தரும் வாய்ப்புகள் | 32 |
| 3. | தொழில் முனைவின் முக்கியத்துவம் | 35 |
| 4. | தொழில் முனைவோர் கொள்ள வேண்டிய குணாதிசயங்கள் | 39 |
| 4.1 | குணாதிசயங்கள் ஓர் ஆய்வு | 45 |
| 5. | தொழில் முனைவோருக்கான இலாவகங்கள் | 47 |
| 5.1 | ஆபத்தை எதிர்கொள்ள விரும்புபவரா? | 50 |
| 6. | அறம் சார்ந்த வணிகம் | 53 |
| 7. | கடைசி பெஞ்ச் மாணவர்களும் கடைந்தேற முடியுமா? | 57 |
| 8. | தொழில் முனைவோருக்கான அரசின் திட்டங்கள் | 61 |
| 9. | தொழில் முனைவோர்கள் பார்வையில் | 65 |
| 10. | நிறைவுரை | 79 |



# 1. அறிமுகப் படலம்

நமது கல்வி அமைப்பு, பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், புதிய, புதிய மற்றும் மாற்றுச் சிந்தனைகளைத் தூண்டவும் மாணவர்தம் படைப்பாற்றலை வளர்த்துக் கொள்ளவும், அவர்களிடையே தொழில்முனைவு மனோபாவத்தை விதைக்கவும், வேலை பெற அலைவதல்ல; வேலை பிறருக்குக் கொடுப்பது முக்கியம் என்ற சித்தாந்தத்துடன் வளரிளம் பருவத்தினரை வளர்த்தெடுக்க முயல்கின்றதா? என்றால், ‘இல்லை’ என்ற பதில்தான் நமக்கு மிஞ்சுகின்றது.

நமது வளர் இளம் பருவத்தினர் பிரச்சனைகளைக் கூர்ந்து நோக்கவும் அவைகளுக்கான தீர்வுகளைப் பற்றிச் சிந்திப்பதுமான வாழ்வியல் திறனைக் கல்வித்திட்டம் கொடுக்கின்றதா என்றால், ‘இல்லை’ என்பதுதான் பதில்.

வியாபார நிர்வாகத்தைச் சொல்லித்தரும் பிரசித்தி பெற்ற இந்தியக் கல்வி நிறுவனங்களே பன்னாட்டு நிறுவனங்களுக்கான நிர்வாகிகளை உற்பத்தி செய்வதில் தான் வெற்றி பெற்றுள்ளன. ஆனால் தொழில் முனைவோர்களை உருவாக்குவதில் அவர்தம் பங்களிப்பு...? ‘‘ஐ ஐ எம் அகமதாபாத்தில் படித்த சரத்பாபு பெரிய தொழிலதிபர் ஆகியுள்ளாரே?’’ என்று நீங்கள் கேட்டால் நான் சொல்லும் பதில், ‘‘அவர் இன்று செய்வது அவர் தாயார் செய்த இட்லி வியாபாரத்தின் நீட்சி தானே?’’

வசதி வாய்ப்பற்ற பள்ளி மாணவர்களுக்கு வாழ்க்கைத் திறனை, தனது ஒருநாள் இலவச ‘வாழ்க்கைத் திறன் பயிற்சி’ மூலம் அளித்து வரும் நிகில் அறக்கட்டளை, தனது அடுத்த நிலையாக அந்த மாணவர்களுக்கு தொழில் முனைவைப் பயிற்றுவிக்கும் முயற்சிதான் இக்கையேடு.

பதின்பருவ மாணவர்கள் தங்கள் வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதைச் சொல்லித் தரப் பல வழிகாட்டி நிகழ்ச்சிகள் இங்கு உள்ளன. ஆனால், அவர்கள் உயர்கல்வி பற்றியும் வேலைவாய்ப்புகள் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறுவது போல தொழில் முனைவு வாய்ப்புகளைப் பற்றிப் போதிக்கின்றனவா? என்றால் 'இல்லை' என்பதுதான் பதில்.

## 1.1 தொழில் முனைவின் இன்றைய நிலை

இங்கு முதல் தலைமுறை தொழில் முனைவோர் வெற்றி பெறுவது என்பது கடினத்திலும் கடினம். பள்ளிக்கு வேனில் பத்திரமாக ஏற்றி அனுப்பப்படும் இன்றைய தலைமுறை, ஏன் சிறு சிறு தோல்விகளுக்கு, ஏமாற்றங்களுக்குப் பழக்கப்படாத அவர்கள் வணிகத்தில் இருக்கும் நிச்சயமற்ற தன்மையை, சிக்கலை, பிரச்சனைகளை அவ்வப்போது ஏற்படும் தோல்விகளை எப்படி எதிர்கொள்வர்? படிப்பு, படிப்பு என்று அலையும் பெற்றோர்கள், விளையாடவே பெரிதாக வாய்ப்பில்லாத இளந்தலைமுறையினர் தோல்விகளை எங்கு சென்று பழகுவர்?

இதில் ஆச்சரிய முரண் என்னவென்றால் நமது இந்தியப் பொருளாதாரத்தில் சிறுகுறு வணிக நிறுவனங்களின் பங்கு கிட்டத்தட்ட 27% மற்றும் நமது ஏற்றுமதியில் அவைகளின் பங்கு 50%. ஆனால் இந்த நிறுவனங்கள் ஆரம்பித்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளேயே மறைந்து விடுகின்றன எனப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

இப்புள்ளிவிவரங்கள், தொழில் முனைவைப் பற்றிய சரியான புரிதல் இல்லை என்பதைத்தானே சுட்டிக்காட்டுகின்றன. கடின உழைப்பிற்கும் நமது இளையோர் பழகவில்லைதானே? தொழில் முனைவைப் பற்றிய புரிதல் அவ்வளவாக இல்லாத கர்னல் சாண்டர்ஸ், 1000 உணவு விடுதிகள் ஏறி இறங்கி, அவமானப்பட்டு, கடின உழைப்பின் துணை கொண்டு, வித்தியாசமான சுவையுடன் கோழிக்கறியை அறிமுகப்படுத்தி, 'கென்டக்கி சிக்கன்' என்ற நிறுவனத்தை வெற்றி பெற வைக்கவில்லையா?

தொழில் தொடங்கி வளர்த்தெடுப்பது என்பது, ஒரு பிள்ளையைப் பெற்று வளர்ப்பது போல் என்று சொல்கின்றனர். இரண்டு நிலைகளிலுமே எண்ணிலடங்காச் சிரமங்கள், திடீர் திடீர் திருப்பங்கள், விடை தெரியாத புதிர்கள் என ஆயிரமாயிரம்

பிரச்சனைகள். இரண்டிலுமே நாம் கற்பனை செய்து பார்ப்பதைவிட அதிக அளவுக்குப் பிரச்சனைகள், அவைகளை எதிர்கொள்ள அதிக முயற்சியும் நேரமும் தேவைப்படுவதோடு, இடையில் விட்டு விட்டு ஓடி விட முடியாது என்ற நிலைவேறு.

ஆனால் பிள்ளை வளர்ப்பின் போது அக்குழந்தை முகம் பார்த்து மலர்வதும் அதன் மழலை தேவகானமாகக் காதில் விழுவதும் நாம் அனுபவிக்கும் இன்பமான விளைவுகள் அல்லவா? அதுபோல நம் தொழில் வளர்வதைப் பார்த்து மகிழ்ச்சியும் வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சியைப் பார்த்துத் திருப்தியும் ஏற்படுவதை மறுக்க இயலுமா?

சூழல், குழப்பமாக, நிச்சயமற்ற தன்மையுடையதாக, தெளிவில்லாத, சிக்கலான தன்மையுடையதாக இருக்கலாம். ஆனால், அவற்றை எதிர்கொள்ளும் பக்குவத்தை நமது இளையோர் பெற்றுவிட்டால் அவர்கள் பயன்பெறுவதுடன், நாடும் பயன்பெற நல்லதோர் வாய்ப்பு உள்ளது அல்லவா? பதின்பருவ மாணவர்கள் தொழில் முனைவில் வல்லமை பெற்றுவிட்டால் வையகமே வளம் பெறும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. ஆகவே அவர்களைத் தொழில் முனைவு பக்கம் ஆற்றுப் படுத்தவே இக்கையேடு. மேலும் அதன் தொடர்ச்சியாக அவர்களுக்கு ஒரு நாள் பயிற்சி அளிக்கவுமே இந்த முயற்சி.

இக்கையேடு பதின்பருவ மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்த்தெடுத்து, பிரச்சனைகளுக்கு *‘மாற்றி யோசித்தல்’* மற்றும் *‘வித்தியாசமாகச் சிந்தித்தல்’* மூலம் தீர்வுகள் காணப் பழக்க விரும்புகின்றது. நம் இளையயோரை வலிமைமிக்க தொழில் முனைவோர்களாக்குவதுதான் இக்கையேட்டின் நோக்கம்.

பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெறாதவர், ‘கிரிக்கெட்டின் கடவுள்’ என்று அழைக்கப்பட்டவர், தனது திறமையால் மிகப் பெரிய வெற்றிகளையும் தனது புகழால் விளம்பர மாடலாக கோடிக்கணக்கில் வருமானம் பெற்றவர், நாடறிந்த டெண்டுல்கர் தானே? ஏன், அவருக்குப் பிறகு விளம்பர உலகின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த தோனி, பிறகு வீராட் கோலி என்று இவர்கள் பொருட்களை, சேவையை விற்றார்கள் என்பதோடு, தங்களையே விற்றார்கள் எனலாமா? ஒருவகையில் இவர்களும் தொழில் முனைவோர்கள் தானே?

ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து, இளைப்பு நோயால் அவதிப்பட்டு, பின் ஏபிசி ஆப் டென்னிஸ் என்று புகழ் பெற்ற விஜய் அமிர்தராஜ், தனது விளையாடும் திறனை மூலதனமாக்கி, சம்பாதித்து, அதன்மூலம் அமெரிக்க இந்தியக் குடும்பங்களில் 100 கோடி சொத்துள்ள குடும்பமாக மாறியதும் தொழில் முனைவால்தானே!

லியான்டர் பயஸ், மகேஷ் பூபதி, பிரகாஷ் படுகோன், சானியா மிர்ஸா, சானியா நெயில்வால், சிந்து போன்றவர்களும் இந்தப் பட்டியலில் அடங்குபவர்கள் தானே?

ஜேசுதாஸ், பாலசுப்பிரமணியம், மனோ போன்ற தொழில் முறைப் பாடகர்கள், இளையராஜா, ரஹ்மான் போன்ற இசையமைப்பாளர்கள், சினிமா இயக்குனர்கள், ஸ்டண்ட், நடன இயக்குனர்கள் போன்றவர்களும் இப்பட்டியலில் அடங்குவார்கள் அல்லவா? அதுமட்டுமல்ல, சொந்தமாகக் கிளினிக் நடத்தும் டாக்டர்கள், பிஸியோதெரப்பிஸ்ட்டுகள், வழக்குரைஞர்கள், பட்டயக்கணக்காளர்கள் போன்றவர்களும் தொழில் முனைவோர் தான்.

இவர்கள் அனைவருக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. ஒருவேளை இவர்கள் தோற்றுவிட்டால் தொழிலை இழந்துவிடும் அபாயம் உண்டு. ஆனால் அது எந்தத் தொழிலுக்கும் பொதுவானதுதானே. ஆபத்து எந்தத் தொழிலில்தான் இல்லை. ஒருவேளை நீங்கள் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கின்றீர்கள் என வைத்துக் கொள்வோம். அங்கும் எந்த நொடியிலும் வேலையை விட்டுப் போகச் சொல்லக்கூடிய அபாயம் உள்ளதே!

பெரும்பாலான முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கு ஒரு பெரிய பிரச்சனை உள்ளது; அது தொழிலுக்கான முதலீடு. ஆனால், வித்தியாசமான சிந்தனை, வாடிக்கையாளர் தேவைகளைக் கண்டறிவது போன்ற விஷயங்கள் இங்கு சிலரை வெற்றி கொள்ள வைத்தன. அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

17 வயதில் இந்தியா முழுவதும் பயணித்து, நடுத்தரக் குடும்ப மக்கள் தங்கத் தரமான தங்கும் விடுதிகள் இல்லை என்றும் அதே வேளை பல விடுதிகள், வாடிக்கையாளர்கள் கிடைக்காமல் அறைகள் காலியாக வைத்துக்கொண்டு திணறுகின்றனர் என்றும் கண்டறிந்த ரித்தேஷ் அகர்வால் இன்று 17 ஆயிரம் கோடிக்குச்

சொந்தக்காரர். ஆம், வாடிக்கையாளர்கள் இல்லாத விடுதிகளையும் விடுதிகள் கிடைக்காத வாடிக்கையாளர்களையும் பொருத்திப் பார்த்தார். மிகப் பெரிய வணிகம் கைகூடியது. சரித்திரமும் படைக்க முடிந்தது.

சாதாரணப் பெட்ரோல் பங்க் ஊழியராக இருந்த திருபாய் அம்பானி அவர்கள், ஆல் போல் வேர் விட்டு, அருகுபோல் தழைத்திருக்கும், ரிலையன் நிறுவனத்தை உருவாக்கி வளர்க்க முடிந்தது.

நம் மாணவர்களை இது போன்ற உதாரணங்கள் மூலம் உத்வேகப்படுத்தி, தொழில் முனைவோர் ஆவதன் மூலம் ஏற்படும் பலன்களை எடுத்துச் சொல்லி, ஒரு நல்ல தொழில் முனைவோருக்குத் தேவையான அறனையும், பண்பு நலன்களையும் சொல்லிக் கொடுத்து, தொழில் முனைவோருக்குத் தேவையான லாவகங்களை அறிமுகப்படுத்தி, வழிகாட்டினால் இந்தியப் பொருளாதாரம் மிகச் சிறந்த நிலைக்குச் செல்லுமே?

தனது 16 வயதிலேயே ஒரு தொழில் முனைவோராக மாறிய இராமச்சந்திர இராஜா அவர்களைப் பொறுமையின் சிகரம் எனக் கூறலாம். அதுமட்டுமல்ல, நிதானம் அவரது விழுமியங்களில் ஒன்று. இத்துடன் இணைந்த அறிவாற்றல் அவரை ஒரு சிறந்த தொழிலதிபராக மாற்றியது மட்டுமல்ல, சமுதாயத்தைப் பற்றியும் சிந்திக்க வைத்தது. மேலும் அவரைக் கல்விப் பணியிலும் ஈடுபடுத்தியது. அதற்குச் சான்றாக இராஜபாளையத்தில் இருக்கும் அன்னப்ப ராஜா மேல்நிலைப்பள்ளி, மற்றும் மஞ்சம்மாள் பாலிடெக்னிக் இன்று வரை சான்றாகத் திகழ்கின்றன. மேலும் ராஜூக்கள் கல்லூரித் தலைவராகவும், கல்லூரி நிர்வாகக் குழுத் தலைவராகவும் அவர் ஆற்றிய பணி பாராட்டுக்குரியது.

அன்னாரின் நூற்றாண்டுப் பிறந்த நாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக மற்றும் அவரது நினைவால் பதின்மப் பருவ மாணவர்களைத் தொழில் முனைவராக ஊக்கப்படுத்தி அவர்களை ஆற்றுப்படுத்தலாமே என்று அன்னாரின் பெயரன்கள் மற்றும் பெயர்த்திகள் விரும்பியதன் பலனாகத்தான் இக்கையேடு உங்கள் கைகளில் தவழ்கின்றது. மேலும் அவர்களின் வேண்டுகோள் தமிழகம் முழுவதும் உள்ள வசதி வாய்ப்பற்ற பள்ளி மாணவர்களை தனது ஒரு நாள் இலவச வாழ்க்கைத் திறன் பயிற்சி

மூலம் வல்லமைப் படுத்திக் கொண்டிருக்கும் நிகில் அறக்கட்டளை, அடுத்த தளத்திற்கு எடுத்துச் செல்லும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையினால் தான் இந்த இணைந்த செயல்பாடு.

## 1.2 பணிசார் அடிமை மனோபாவம்

நிலையான, மற்றும் நிரந்தரமான வருமானத்திற்காக வாழ்க்கையையே அடகு வைக்கும் நிலைக்குப் பணிக்குச் செல்பவர்கள் தள்ளப்படுகின்றார்கள் என்பது உண்மை. அது ஒரு வேதனைக்குரிய செயல். வெந்ததைத் தின்று வெற்றுவாழ்வு வாழ நினைக்கும் பலரும் ஏதோ ஒரு வேலையைத் தேடிச் சொற்ப வருமானத்திற்கு தங்களின் வாழ்வையையே செலவு செய்வது மிகவும் வருந்தத்தக்கது. வேலை சார்ந்த அடிமை மனோபாவம் அல்லது பணிசார் அடிமை மனோபாவம் என்று இதைக் கூறலாமா?

இப்படிப்பட்ட அடிமை மனோபாவத்திலிருந்து நம் இளைஞர்களை எப்படி மீட்டெடுப்பது? பொருளாதாரத்தைப் பொறுத்தளவு அவர்களைச் சுதந்திரமாகச் செயல்படத் தொழில் முனைவு உதவும் அல்லவா?

இராமன் ஒரு வேலையில் சேர்ந்து தனது வாழ்க்கையை நடத்தி வருகின்றான். சொற்ப வருமானம் என்பதால் தவணை முறையில் ஓர் இருசக்கர வாகனத்தை வாங்கிப் பயன்படுத்தி வருகின்றான். காலம் கடக்கின்றது. பணி ஓய்வு பெறப் போகும் காலத்தில், கஷ்டப்பட்டு டாடா கார் ஒன்றை வாங்கிக் குடும்பத்துடன் மகிழ்ச்சியாகப் பயணிக்கின்றான். அவன் வாழ்வும் ஓரளவிற்குச் சீரான நிலையில் தான் சென்றது.

இவன் வேலைக்குச் சேர்ந்த காலத்தில்தான் இவனது நண்பன் மகேஷ் ஒரு சிறிய தொழிலை ஆரம்பிக்கின்றான். கஷ்டப்பட்டு ஒரு டிவிஎஸ் 50 வாகனத்தை வாங்கித் தனது சொந்த உபயோகத்திற்காகவும், தொழிலுக்காகவும் பயன்படுத்திக் கொள்கிறான். காலச் சூழல்கள் மாறுகின்றன. ஹீரோ இரண்டு சக்கர வாகனத்தை வாங்குகின்றான். தொழில் நல்லபடியாக நடக்க குறுகிய காலத்திலேயே ஒரு நான்கு சக்கர வாகனத்திற்கு அதிபதியாக ஆகிவிடுகின்றான். நீச்சல் குளம் உள்ள ஒரு பெரிய வீட்டையும் கட்டிக் குடியேறுகின்றான்.

நண்பர்களான இருவரும் சமகாலத்தில் வெவ்வேறு பாதைகளில் பயணிக்கின்றனர். வசதியைப் பொறுத்தளவில்

இரண்டுபேருக்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம். இராமனின் வாழ்க்கை ஓரளவிற்குச் சீராகப் போய்க் கொண்டிருக்கும் போது, தொழிலில் மகேஷ் எதிர்கொண்ட பிரச்சனைகளால் அவனது வாழ்க்கையில் மேடுபள்ளங்கள் ஏற்பட்டன. ஆனாலும் வீழ்ச்சியிலிருந்து மீண்டெழும் பீனிக்ஸ் பறவை போல ஒவ்வொரு முறையும் செயல்பட்டதால் அவனுக்கு ஏற்பட்ட சரிவுகளிலிருந்து மீண்டு இன்றைய வளமான நிலைக்கு வருகிறான்.

பணிசார் அடிமையாக இல்லாமல் சொந்தமாக தொழில் தொடங்கியதால் மகேஷின் வாழ்க்கை ஒரு மேம்பட்ட தளத்திற்குச் சென்றது என்பதை மறுக்க இயலாது.

இங்குத் தொழில் முனைவில் ஈடுபட்டதால் மகேஷால் பலருக்கு வேலை கொடுக்க முடிந்தது. நல்ல சம்பளம் அவர்களுக்குக் கொடுக்க முடிந்ததால் அந்தப் பகுதியில் பண சுழற்சி ஏற்பட்டது. அவனது தொழிலாளர்கள் மத்தியில் வாங்கும் திறன் மேம்பட்டது. அரசின் பொறுப்பான, வேலைவாய்ப்புத் தருவதை தனிப்பட்ட மகேஷால் செய்ய முடிந்தது.

இதனால்தான் அரசும் தொழில் முனைவுச் சித்தாந்தத்தை இளைஞர்கள் மத்தியில் பரப்பி அவர்களை பணிசார் அடிமை மனோபாவத்திலிருந்து விடுவிக்க முயன்று கொண்டிருக்கின்றது. அரசு மட்டுமல்ல, தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் போன்றவை தொழில் முனைவுச் சித்தாந்தத்தை இளையவர்கள் மத்தியில் பரப்பித் தொழில் முனைவோர் அதிகம் இருக்கும் சமுதாயமாக மாற்றிவிட வேண்டும் என்று முயன்று கொண்டிருக்கின்றன. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அதுவே அச்சாணி.

நிலம், உழைப்பு, மூலதனம் போன்றவை பொருளின் உற்பத்திக் காரணிகளாகக் கருதப்பட்டாலும் மிக முக்கியக் காரணி தொழில் முனைவிற்கான மனோபாவம்தான். நடிகர் ரஜினிகாந்த் மூன்று முகம் படத்தில் மூன்று வேடங்களில் நடித்தார். நாமோ அன்றாடம் மூன்று வேடங்கள் தரித்துத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம். நமது அறிவு, லாவகம் அல்லது மென்திறன், மற்றும் மனோபாவம்தான் அந்த மூன்று முகங்கள்.

பாரத் மின்நிறுவனம் பெங்களூரில் ரேடார் தயாரிக்கும் பிரிவில் வேலை பார்த்துக் கொண்டிருந்த எனது நண்பர் ஒருவர்

தொழில் முனைவோராக மாறும் முனைப்பில் திருநெல்வேலியில் வந்து தொலைக்காட்சிப் பெட்டி தயாரிக்கும் நிறுவனத்தை ஆரம்பித்தார். அந்தத் தொழிலுக்கான அறிவும், திறன்களும் அவருக்கிருந்தன.

அவர் 1986-இல் தயாரித்த முதல் கலர் தொலைக்காட்சிப் பெட்டி 16 வருடங்கள் கழித்து நான் ரூ2000த்திற்கு விற்ற சமயத்திலும் சிறப்பாக ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் அந்த நிறுவனம் 1990ஐத் தாண்டவில்லை. அவர் தோல்விக்குக் காரணம் அவரது அறிவோ, திறன்களோ இல்லை, அவரது மனோபாவம் தான். ஒரு தொழில் முனைவோருக்குரிய பொறுமை, ஆட்களை நிர்வகிப்பது, அரசு அதிகாரிகளை எதிர்கொள்வது, போன்றவை அவரிடம் போதுமானதாக இல்லை.

தொழில் முனைவில் எதிர் கொள்ளும் ஆபத்துக்களை எண்ணித்தான் என்னவோ, கல்யாணச் சந்தைகளில் பணிசார் அடிமைகளுக்கு இருக்கும் மரியாதை தொழில் முனைவோர்களுக்கு இல்லை. விதிவிலக்கு குஜராத்திகள் மட்டும்தான். அவர்கள் வேலைக்குச் செல்வதற்கு முன்னுரிமை அதிகம் கொடுப்பதில்லை. தொழிலில் ஈடுபடுபவர்களுக்குத்தான் கல்யாணச் சந்தையில் அதிகம் மரியாதை. ஆனால் இது விதிவிலக்கு தானே.

சமுதாயத்தின் இந்த மனநிலையும் கண்டிப்பாக மாற வேண்டும். சமுதாயமும் தொழில் முனைவு பற்றிய தவறான கருத்தை ஒழித்திடல் வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் குழந்தைகளை தொழில் முனைவோர்களாக மாற ஊக்குவித்திடல் வேண்டும். அப்படியானால் தொழில் முனைவு என்றால் என்ன? தொழில் முனைவோர் என்பவர் யாரென்று பார்த்தால் நலமாக இருக்கும் அல்லவா?

தொழில் பண்ணுவது என்றால் என்ன என்றே அறிந்திராத நமது பள்ளி மாணவர்களைத் தொழில் முனைவோர்களாக மாறுங்கள் என்றால் என்ன செய்வார்கள். அவர்களுக்குத் தொழில் முனைவு பற்றிய அடிப்படை அறிவைப் புகட்டுவது நலம் அல்லவா?

தொழில் முனைவு பற்றித் தெரிந்து கொள்வோம். வாருங்கள்.

பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். (குறள் 675)

ஒரு காரியத்தில் ஈ.டுபடுவதற்கு முன்பு, அதற்குத் தேவையான பொருள், ஏற்ற கருவி, காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தையும் குறையில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். (குறள் 517)

ஒரு காரியத்தை ஒருவர் எப்படி செய்து முடிப்பார் என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு அந்தக் காரியத்தை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.



YOU BECOME WHAT
YOU BELIEVE.

# 2. தொழில் முனைவு

தொழில் முனைவு என்றாலே நம் நினைவுக்கு வருபவை புதுமை, வியாபாரப் புத்திசாலித்தனம், பொறுமை, விடாப்பிடித்தன்மை, மாற்றி யோசித்தல் போன்றவை தான்.

ஊரிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டு வந்த சரவணன், சென்னையின் புறநகர்ப்பகுதி ஒன்றில் தங்குவதற்கு இடம் பார்க்கின்றான். அங்கு ஒரு பலசரக்குக் கடையும் ஆரம்பித்து நன்றாக வியாபாரம் நடக்கின்றது. வணிகத்தை மேம்படுத்த அந்தக் கடையை ஒரு ஹைப்பர் மார்ட்டாக மாற்ற எண்ணுகின்றான். ஆனால் அவனிடம் இருக்கும் பணம் போதாது. அதனால் பாஸ்கரனையும் பங்குதாரராகச் சேர்த்து ஹைப்பர் மார்க்கெட்டை ஆரம்பிக்கின்றான்.

பாஸ்கர் ஒரு கட்டிடப் பொறியாளராக சொந்தமாகக் வீடு கட்டி விற்பது மற்றும் பிறருக்கு வீடு கட்டிக் கொடுப்பது என்று ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து, இன்று கட்டுமானத் துறையில் கொடி கட்டிப் பறக்கின்றார். வீடுகள் மட்டுமே கட்டிக் கொண்டிருந்த அவரது நிறுவனம் இன்று பாலங்கள், தண்ணீர் தொட்டிகள், நெடுஞ்சாலை என்று பல்கிப் பரந்திருக்கின்றது.

கண்ணன் மென்பொருள் பொறியாளராகத் தேர்வு பெற்று எவரிடமும் வேலைக்குச் செல்லாமல் சொந்தமாக கணிணி மென்பொருள் தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்குகின்றார். மென்பொருள் தேவை என்பது இன்று எல்லா தொழில்களிலும் நிறைந்திருக்கின்றது. ஆக உள்நாட்டில்மட்டுமல்ல இன்று வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து பெரும் பொருள் ஈட்டிக் கொண்டிருக்கின்றார்.

தமிழக அரசு மதுரையில் பின்னலாடை நிறுவனங்கள் வளர்ச்சிக்காக உறங்கான் பட்டியில் நிறுவனங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்து, இதர பிற சலுகைகளையும் அறிவித்தது. கந்தனும் ஒரு பின்னலாடை உற்பத்தி செய்யும் நிறுவனத்தை அந்த சிப்காட்டில் ஆரம்பித்து, இன்று பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றார்.

முருகனோ பெண்களுக்கான பாவாடைகள் மற்றும் நைட்டிகள் தயாரித்து இன்று பெரிய அளவில் வணிகம் செய்து வருகின்றார். உள்நாட்டிலேயே அவர் தயாரிக்கும் நைட்டிகளுக்கும் பாவாடைகளுக்கும் பெரிய கிராக்கி இருக்கின்றது.

வினோத் ஐடிஐ பிட்டருக்கான படிப்பை முடித்து விட்டு ஒரு லேத் ஆரம்பிக்கின்றான். அந்த லேத் நன்கு வளர, வளர, உள்ளூர் ஆயில் சீல் நிறுவனத்திற்கு உதிரி பாகங்களைத் தயார் செய்து அனுப்புகின்றான். அந்த ஆயில் சீல் நிறுவனமோ 100 கோடி ஆண்டு விற்பனை உடையது. இன்று வினோத் மிகப் பெரிய நிலைக்கு வளர்ந்து விட்டான்.

முத்துவோ அதிகம் படிக்கவில்லை. ஆனால் நல்ல உழைப்பாளி. சாலையோரம் ஒரு வடைக் கடையை ஆரம்பிக்கின்றான். ஆரம்பித்த சில நாட்களிலேயே ஒரு நாளைக்கு ரூ 12,000த்திற்கு வியாபாரம் ஆகின்றது. இன்று அவன் வளர்ந்து ஒரு டீக்கடைக்கு உரிமையாளராக மாறிவிட்டான்.

மதுரையில் ஒரு நிறுவனம் பிற நிறுவனங்களின் ஆள் தேவைக்காக ஆட்களை அனுப்பி வருமானம் ஈட்டும் முன்னணி நிறுவனமாக தேசீய அளவில் செயல்படுகின்றது. வேலை தேடுபவர்களையும் வேலையாட்கள் தேடுபவர்களின் தேவைகளையும் பொருத்தும் மிகப் பெரிய பணியில் அந்த நிறுவனம் உள்ளது. இலாபம் கொழிக்கும் என்ற சொல்லவும் வேண்டுமா?

மதுரை ஒரு இரப்பர் மையம் என்பதால் இரப்பர் பந்து தயாரிக்கும் நிறுவனத்தை எழுமலை ஆரம்பிக்கின்றான். அவன் தயாரிப்புப் பந்துகளும் ஸ்டம்பர் பந்துகள் போன்று பிரசித்தி பெற்றவைதான். அவன் பந்துகளுக்கு சந்தையில் மிகுந்த கிராக்கி இருக்கின்றது.

ஆக தொழில் முனைவு பற்றி இப்படிச் சொல்லலாம் என எண்ணுகின்றேன். தனிப்பட்ட ஒரு மனிதனோ அல்லது மனிதர்களோ இணைந்து ஒரு நிறுவனத்தை, வணிகத்தை ஆரம்பித்து அதன் மூலம் வாணிகம் செய்து அந்த நிறுவனத்தை வளர்த்தெடுப்பதுதான் தொழில் முனைவு ஆகும்.

தொழில் முனைவு மற்றும் அதற்கான அணியைத் திரட்டுவது என்பது 90% புரிதல் மற்றும் 10% செயல்பாடு என்றும், 90% மற்றவர்கள் நிலையில் வைத்துப் பார்ப்பது மற்றும் 10% எதேச்சாதிகாரம் என்றும் 100% பொறுமை என்றும் கூறுவர்.

பொதுவாகத் தொழில் முனைவு என்பது வணிக வாய்ப்புகளை இனம் கண்டு, ஆபத்துக்களுக்கு முகம் கொடுத்து, மனித சமூகத்தின் தேவைகளையும் விருப்பங்களையும் திருப்தி செய்வதற்காகக் காலம், செல்வம், திறமை போன்றவற்றை ஈடுபடுத்தி, போட்டியான உலகில் புதியன படைத்து, நாட்டின் தேசீய உற்பத்திக்குப் பெருமையைச் சேர்த்தலும், நிலவுகின்ற பொருளாதார முறையில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்குப் பங்களிப்புச் செய்தலும் ஆகும். இப்பொழுது தொழில் முனைவோர் யாரேன்று பார்ப்போம்.

## 2.1 தொழில் முனைவோர்

அகராதி சொல்வது - யாரொருவர் வெற்றிக்கோ, இலாபத்திற்கோ வாய்ப்பிருக்கின்ற ஒரு நிறுவனத்தையோ, ஒரு வணிகத்தையோ ஆரம்பிக்கின்றாரோ அவர் தொழில் முனைவோர் ஆவார். சுருங்கச் சொன்னால் தொழில்முனைவோர் என்பவர் பொருட்களை உற்பத்தி செய்பவர் அல்லது வணிகம் செய்பவர், அல்லது சேவைகளை விற்பவர் என்று கொள்ளலாம். அவரது செயல்பாடுகளை வைத்துப் பின்வருமாறு சொல்லலாமா?

- ஒரு வாய்ப்பினை இனம் காண்பவர்
- வாய்ப்பினை ஒரு வேட்கையுடன், தீராத ஆர்வத்துடன் நம்புபவர்
- தனது மிகச் சிறந்த பங்களிப்பினைத் தரத் தயாராக இருப்பவர்
- ஓர் அணியைக் கட்டமைக்கத் தயாராக இருப்பவர்
- தனது கனவினை அடைவதற்காக உழைக்கத் தயாராக இருப்பவர்.
- புதுமையான கருத்துகளுக்குச் சொந்தக்காரர்.

அதாவது, பொருட்களுக்கான அல்லது சேவைகளுக்கான மக்களின் தேவைகளைப் பொருத்திப் பார்க்க முடிந்தால், அவர்களுக்கு அவைகளைக் கிடைக்கச் செய்தால், ஒருவர் நல்ல தொழில் முனைவோராக மாறுகின்றார். ஒரு நல்ல தொழில் முனை வோராவதற்கு தகுதி உங்களிடம் உள்ளதா? சோதனைக்குத் தயாரா?

### 2.1.1 தொழில் முனைவோராகத் தகுதியானவரா நீங்கள்?

'ஆம்' அல்லது 'இல்லை' எனப் பதில் கூறவும்

1. ஒரு தடவை முடிவெடுத்திட்டால் என்பேச்சை நானே கேட்கமாட்டேன் என்று எடுத்த முடிவில் உறுதியாக இருப்பவரா? ஆம் / இல்லை
2. எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் ஆரம்பித்தத் திட்டத்தை நடத்தி முடிப்பீர்களா? ஆம் / இல்லை
3. பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு செயல்பட விரும்புபவரா நீங்கள்? ஆம் / இல்லை
4. உங்களுடன் பழகும் நபர்கள் உங்கள் மீது மரியாதையும், நம்பிக்கையும் வைத்துள்ளார்களா? ஆம் / இல்லை
5. நல்ல உடல் ஆரோக்கியம் உடையவரா நீங்கள்? ஆம் / இல்லை
6. பலனைப் பற்றிக் கவலைப் படாது நேரம் காலம் பார்க்காமல் அதிக நேரம் வேலை செய்ய விரும்புபவரா நீங்கள்? ஆம் / இல்லை
7. பிற மனிதர்களைச் சந்திப்பதையும், அவர்களுடன் தொடர்பு கொள்வதையும் விரும்புபவரா நீங்கள்? ஆம் / இல்லை
8. உங்கள் கனவுகளுடன் பிறர் உங்களைத் தொடர்ந்து வருமாறு பேசும் திறன் கொண்டவரா நீங்கள்? ஆம் / இல்லை
9. உங்கள் கருத்துக்களையும், உங்கள் சித்தாந்தங்களையும் பிறர் எளிதில் புரிந்து கொள்கின்றனரா? ஆம் / இல்லை
10. நீங்கள் ஆரம்பிக்க விரும்பும் தொழில் பற்றி ஆழமாகத் தெரிந்து கொள்ள விரும்புபவரா நீங்கள்? ஆம் / இல்லை
11. வாணிபம் அல்லது தொழில் நடத்தக்கூடிய அனுபவம் உள்ளதா? உதாரணத்திற்கு சரக்கு மற்றும் சேவை

வரிக்கான கணக்கு வழக்குகள், வருமான வரி சம்பந்தப்பட்ட அறிக்கைகள், சம்பள பில் போன்றன பற்றி உங்களுக்குத் தெரியுமா? ஆம் / இல்லை

12. நீங்கள் சந்தைப் படுத்த விரும்பும் பொருள் அல்லது சேவைக்கான தேவை நீங்கள் வசிக்கும் பகுதியில் இருக்கின்றதா? ஆம் / இல்லை

13. நிதி நிர்வாகம், பொருட்களை, சேவைகளைச் சந்தைப் படுத்துதல் மற்றும் நிதி நிர்வாகத்தில் நீங்கள் திறன் பெற்றுள்ளீர்களா? ஆம் / இல்லை

14. உங்கள் தொழில் சம்பந்தப்பட்ட வேறு நிறுவனங்கள், உங்கள் போட்டியாளர்கள் உங்கள் பகுதியில் சிறப்பாகச் செயல்படுகின்றனரா? ஆம் / இல்லை

15. உங்கள் வாணிகம் நடத்துவதற்கான ஏதாவது ஓர் இடம் உங்கள் மனதில் உள்ளதா? ஆம் / இல்லை

16. தொழிலை ஆரம்பித்து நடத்துவதற்கான போதிய நிதி ஆதாரம் உங்களிடம் உள்ளதா? ஆம் / இல்லை

17. உங்கள் வாணிகத்திற்கான நிதித் தேவையை நண்பர்களிடம் அல்லது உறவினர்களிடம் புரட்ட முடியுமா? ஆம் / இல்லை

18. உங்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள், ஸ்பேர் அல்லது உதிரி பாகங்கள், சரக்குகள் சப்ளை செய்பவர் களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? ஆம் / இல்லை

19. உங்களுக்குக் குறைவாக இருக்கக் கூடிய திறமை மற்றும் ஞானம், அதிகம் உடையவர்களை உங்களுக்குத் தெரியுமா? ஆம் / இல்லை

20. மற்ற அனைத்து விஷயங்களையும் விட இந்த வாணிபத்தை உண்மையிலேயே நீங்கள் ஆரம்பிக்க விரும்புகின்றீர்களா? ஆம் / இல்லை

மேலே கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பதன் மூலம் ஒரு தொழில் முனைவருக்கான தகுதியை நீங்கள் பெற்றுள்ளீர்களா என்று அறிந்து கொள்ள இயலும்.

## 2.2. வயது ஒரு தடையா?

*தொழில் முனைவோர்களாக மாற வயது ஒரு தடையில்லை என நிரூபித்த சில சாதனையாளர்களைப் பற்றி இங்கு பார்ப்போம்.*

*1. தனது எட்டு வயதில் வலைதள வடிவமைப்பு மற்றும் அது சம்பந்தமான சேவைகள் செய்யும் ஈ டிசைன் என்ற நிறுவனத்தை ஆரம்பித்து நடத்தி வரும் ஸ்ரீ லட்சுமி சுரேஷ் இளவயது வலைதள வடிவமைப்பாளர் என்ற கின்னஸ் சாதனைக்குச் சொந்தக்காரர். மிகச் சிறந்த சாதனைக்கான தேசியக் குழந்தை விருதைப் பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சிக்கான அமைச்சகத்திடமிருந்து 2008ஆம் ஆண்டு பெற்றவர்.*

*2. கணினி விளையாட்டுப் படைப்புகள் ஆப்பிள் பிளே ஸ்டோரில் ஏழும், கூகுள் பிளே ஸ்டோரில் மூன்றும் வைத்திருக்கும் சிரவன் மற்றும் சஞ்சய் தங்கள் பத்து வயதிலேயே தொழில் முனைவர்களாக மாறி விட்டனர். ஆறாம் வகுப்பு மற்றும் எட்டாம் வகுப்புப் படிக்கும் பொழுதே தலைமை இணைச் செயலாக்க அதிகாரிகளாக மாறி விட்டனர். இவர்களது படைப்புகள் கிட்டத்தட்ட 60 நாடுகளில் 36,000 தடவை தரவிறக்கப்பட்டுள்ளன என்பது கூடுதல் செய்தி*

*3. எட்டாவது வகுப்புப் படிக்கும் பொழுது தனது கனவான வீட்டுக்கு வீடு பார்சல் மற்றும் கடிதங்களை வாங்கிக் கொள்வதும் அவைகளை டெலிவரி செய்வதுமான முயற்சிக்கு பேப்பர் என் பார்சல் என்ற பெயர் வடிவம் கொடுத்து தனது 13 வயதில் தொழில் முனைவோராக மாறிய திலக் மெகுதா மற்றுமோர் அதிசயம் அல்லவா?. ஸ்டீவ் ஜாப்ஸ், மற்றும் அம்பானியைப் பற்றிப் படித்தது தான் தன்னை இப்படி மாற்றியது என்று ஒரு நேர்காணலில் தெரிவித்தார். இவர் சம்பாதிப்பதோ மாதம் 2 கோடி, இவர் சொத்து மதிப்போ 65 கோடி, இவருடைய ஆண்டு வணிகமோ 200 கோடி என்று நம்மைப் பிரமிக்க வைக்கின்றார்.*

*4. தனது 14 வயதில் ஒரு நிறுவனத்தின் தலைமைச் செயலாக்க அதிகாரியாக மாறிய செல்வி சிந்துஜா ராஜாமாறன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம். இவர் நிறுவனத்தின் பெயர் செப்பன். இவர் கார்ட்டூன் படங்கள் மற்றும் கேலிச் சித்திரங்கள் வரையக் கூடிய திறமைசாலி. தனது திறமையைத் தனது நிறுவனத்தின் மூலம் ஒரு தொழிலாக மாற்றிவிட்டார். கோரல் நிறுவனத்தின் விளம்பர*

தூதுவராகவும் இருக்கின்றர். அந்த நிறுவனம் இவரை உலகத்தின் இளவயது கணினிக் கேலிச் சித்திரம் வரைபவர் என்று கூறுகின்றது.

5. ஐஐடி மும்பையில் பொறியியல் படித்து விட்டு இரண்டு ஆண்டுகள் கம்ப்யூட்டர் துறையிலும் வேலை பார்த்தவர் இவர். டாக்ஸிக்களுடன் பவிஷ் அகர்வால் தனக்கு ஏற்பட்ட மோசமான அனுபவத்தால் மக்களுக்குத் தரமான பயண அனுபவம் கிடைக்க வேண்டும் என்று இவர் ஆரம்பித்த ஓலா நிறுவனம் இந்தியாவின் 750 ஊர்களிலும் மற்றும் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் இன்று செயல்பட்டு வருகின்றது

6. தனது 17ஆவது வயதில் தொழில் முனைவோராக ஆன ரித்திஷ் அகர்வால் இன்று 16,0000 கோடிக்குச் சொந்தக்காரர். இந்தியா முழுவதும் பயணம் செய்த இவர் பட்ஜெட் ஹோட்டல்களின் தேவையை அறிந்து OYO வைத் தொடங்கினார். இன்று இந்தியா மட்டுமல்ல பல நாடுகளில் கிளை பரப்பி அந்த நிறுவனம் செயல்படுகின்றது.

7. தனது 16வது வயதில் தன் அப்பாவிடம் வாங்கிய கடன் ரூ500ஐ முதலாக வைத்து வலைதள வடிவமைப்பில் பர்ஹாத் ஆசிட்வாலா கவனம் செலுத்த ஆரம்பிக்கின்றார். உலகிலேயே இளம் தொழில் முனைவோர்களில் ஒருவராகத் தனது தொழிலை ஆரம்பித்தார். இன்று அவருடைய நிறுவனம், விளம்பரம், வலைதள வடிவமைப்பு, சந்தைப் படுத்தல், நிறுவன அடையாளப்படுத்தல் (Branding) போன்ற துறைகளில் பல நிறுவனங்களை மேம்படுத்திக் கொள்ள உதவுகின்றது.

8. தனது 11ஆவது வயதில் வித்தியாசமான செயல்களால் பிறரைக் கவர ஆரம்பித்த கிங் சித்தார்த் குறைந்த அளவு அறிமுகக் கட்டணம் வைத்துப் போட்டிகளை நடத்திப் பரிசுகளை வழங்க ஆரம்பித்தார். அனைவருக்கும் இது பிடித்தாலும் இது ஆரம்பம் தான். பணம் சம்பாதிப்பதற்கான யோசனைகள் மற்றும் கழிவுகளைக் குறைப்பது பற்றியும் கூற ஆரம்பித்தார். அதிலும் கல்யாணத்தின் பொழுது கிடைக்கும் கூடுதல் மலர்களைப் புதுவிதமான விளம்பர உத்திகளுடன் அவைகளைக் கழுத்துச் சங்கிலிகளாக மாற்றி விற்பனை செய்தார். இன்று ஒரு பத்திரிகை வெளியீட்டாளராக, ஆசிரியராகப், பேச்சாளராகப் பல பரிமாணங்கள் தொட்டிருக்கும் இவர், இவருடைய செயல்கள்

முழுவதும் இளைஞர்களுக்காக இருப்பது போலப் பார்த்துக் கொள்கின்றார்.

9. ரன்வீர் அல்லா பாடியா ஓர் உடற்கட்டுக்கான பயிற்சியாளர். யூடியூபில் உடற்கட்டு, யோகா, மற்றும் உறவுகள் பற்றிய ஆலோசனை, தொழில் பற்றிய ஆலோசனை போன்ற இவரது யூடியூப் காணொளிகள் பிரசித்தி பெற்றவை.

மேற்கண்ட உதாரணங்கள், சாதனைக்கு வயது தடை இல்லை என்று நமக்கு உணர்த்துகின்றன.

## 2.3 தொழில் முனைவோர் வகைகள்

தொழில் முனைவோர்களைப் பொதுவாக மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்

அ. உற்பத்தி செய்பவர்கள் (Manufacturers)
ஆ. வாணிபச் சேவை (Service Providers)
இ. வணிகம் (Retail and whole sales)

### அ. உற்பத்தி செய்பவர்கள்

சிமென்ட், இரும்பு, ஸ்டீல், கார், டயர் என்று பெரிய அளவில் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நடத்துபவர்கள். மேலும் பெரிய நிறுவனங்களுக்கான கச்சா பொருட்கள், உதிரிப் பாகங்கள் செய்யும் சிறு, குறு வணிக நிறுவனங்கள் நடத்துபவர்கள்.

உற்பத்தி செபவர்களுக்கு சொந்த நிறுவனங்கள் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. குட் டே, மில்க் பிக்கிஸ் போன்ற பிஸ்கெட்டுகளைத் தயாரிக்கும் பிரிட்டானியா பிஸ்கட் நிறுவனத்திற்குச் சொந்தத் தொழிற்சாலை கிடையாது. தங்கள் தேவைக்கான பிஸ்கெட்டுகளைச் சிறு, குறு வணிகநிறுவனங்கள் மூலம் தயாரித்துக் கொள்கின்றனர்.

ஆயில் சீல், ரீட் வால்வ் அசெம்பிளி போன்றவைகளுக்கான உதிரிப் பாகங்களைச் சிறு குறு வணிக நிறுவனங்கள் தான் தயாரித்துத் தருகின்றன.

### ஆ. வணிகச் சேவை நிறுவனங்கள்

பெரிய பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களாக இருந்தாலும் சரி, மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்களாக இருந்தாலும் சரி, ஸ்டார் ஹோட்டல்கள், சின்னஞ் சிறிய ரெஸ்டாரண்டுகள், சாலையோர

டீக்கடைகள், வடைக் கடைகளாக இருந்தாலும் சரி, பள்ளி, கல்லூரிகளாக இருந்தாலும் சரி, இவைகள் எல்லாம் வணிகச் சேவை செயும் தொழில் நிறுவனங்களின் கீழ் வரும் விளம்பர மாடல்கள், இயக்குநர்கள், பாடகர்கள், இசையமைப்பாளர்கள் போன்றவர்களும் இந்த பிரிவின் கீழ்வருவர்.

**இ. வணிக நிறுவனங்கள்**

டி மார்ட், ரிலையன்ஸ் மார்ட், வால்மார்ட் போன்ற நிறுவனங் களாக இருந்தாலும் சரி, இரண்டு சக்கர, நான்கு சக்கர விற்பனை நிறுவனங்களாக இருந்தாலும் சரி, மருந்துக் கடைகளாக இருந் தாலும் சரி, உள்ளூர் பலசரக்குக் கடைகளாக இருந்தாலும் சரி, இந்தப் பிரிவின் கீழ் வரும். ஆக, மேலே கண்ட மூன்று பிரிவுகளில் எந்தப் பிரிவிலும் தொழில் தொடங்கி தொழில் முனைவோர் ஆகலாம்.

**2.4. மகளிர் தொழில் முனைவோர்கள்**

ஒரு நிறுவனத்தின் மூலதனத்தில் குறைந்தபட்சம் 50 விழுக்காடு நிதி சார்ந்த உரிமையும் உருவாக்கப்பட்ட பணியில் 51 விழுக்காட்டிற்குக் குறையாமல் மகளிருக்கு அளிக்கும், மகளிரால் உரிமை ஏற்று நடத்தப்படும் மற்றும் கட்டுப்படுத்தப்படும் ஒரு தொழில் வினை மகளிர் தொழில் முனைவு ஆகும்.

மகளிர் தொழில் முனைவோருக்கான வாப்புகள் நம் சமுதாயத்தில் அதிகம். ஒவ்வொரு பிரிவாகப் பார்ப்போம்.

**உற்பத்திப் பிரிவு**

கொரோனா பெரும் தொற்றுக் காலத்தில் கூட ஆண்கள் வேலைக்குச் செல்லாத பல வீடுகளில் பெண்கள் கேக், அப்பளம், ஊறுகாய், லட்டு போன்ற இனிப்புப் பொருட்கள் எனச் செய்து தங்களையும் தங்கள் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொண்டனர்.

இது போகப் பெண்கள் செய்யக்கூடிய தொழில்கள் என்று எடுத்துக்கொண்டால், மெழுகுவர்த்தி, அகர்பத்திகள், பின்னலாடைகள் செய்தல், கைவினைப் பொருட்கள், தையல் தொழில், அச்சகம் நடத்துதல், கம்பளி விரிப்புகள் தயாரித்தல் அவர்களுக்கு ஏற்ற தொழில்களாக நிரூபிக்கப் பட்டுள்ளன.

**வணிகச் சேவைப் பிரிவு**

சிற்றுண்டிச் சாலை நடத்துதல், உணவு சமைத்து விற்பனை செய்தல், கல்விச் சாலை அமைத்தல், கணினி மையம், தட்டச்சு

மையம் துவங்குதல், உலர் சலவையகம் அமைத்தல், தையல் வேலை செய்தல், ஒப்பனைக் கடைகள் ஆரம்பித்தல், குழந்தைகள் காப்பகம் நடத்துதல், மேலும் மலர் நிலையங்கள், அழகு மையங்கள் போன்ற தொழில்கள் மகளிருக்கு அதிக வாய்ப்பை உருவாக்கித் தருகின்றன. இன்னும் நாம் பார்க்கும் சாலையோர இட்லி, பணியாரக் கடைகள், வடைக் கடைகள் என்று பெண்கள் செய்யும் தொழிலுக்குச் சான்றாக விளங்குகின்றன.

**வணிகப் பிரிவு**

அழகு சாதனப் பொருட்கள் வணிகம், பால் விநியோகம், இனிப்பு, காரக் கடைகள், மளிகைக் கடைகள், ஆடையகங்கள், காய்கறி, பழ வணிகம், பழச்சாறு நிலையங்கள், மருந்தகங்கள், காபி, தேனீர் விற்பனை, வீடு வீடாகச் சென்று ஜவுளி விற்பது போன்று பெண் தொழில் முனைவோர்களை வரவேற்றுப் பல்வேறுபட்ட தொழில்கள் காத்துக் கொண்டிருக்கின்றன.

**பெரு நிறுவனங்களில் பெண்களின் பங்கு**

நட்சத்திர விடுதிகள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள், திரைப்படம் தயாரித்தல், இயக்குதல் போன்றவற்றில் பெண் தொழில் முனைவோர்கள் தடம் பதித்துள்ளனர்.

டாஃபே சேர்மன் திருமதி மல்லிகா ஸ்ரீனிவாசன், மதுரை டிவிஎஸ் குழுமத் தலைமைச் செயலாக்க அதிகாரி செல்வி ஷோபனா இராமச்சந்திரன், சன் ரைஸர்ஸ் கிரிக்கெட் அணியின் தலைமைச் செயலாக்க அதிகாரி திருமதி காவியா மாறன், பெண் இயக்குனர்கள், சுதா கொங்கரா, ஐஸ்வர்யா தனுஷ் மற்றும் கிருத்திகா உதயநிதி, ஹாலிவுட் தயாரிப்பாளர் ஓப்ரா வின்பிரே போன்றவர்கள் நம் கண் முன்னே இருக்கும் சான்றுகள்

## 2.5 பெண் தொழில் முனைவோருக்கான அரசு ஏற்படுத்தித் தரும் வாய்ப்புகள்

1. ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம்
2. தொழில் முனைவு உதவி மற்றும் வளர்ச்சித் திட்டம்
3. மகிளா கயிறு திட்டம்
4. மகிளா இ ஹாட்
5. மகளிர் உதவித் திட்டம்
6. பிரதம மந்திரி ஊரகத் திட்டம்
7. ஊரகத்தில் உள்ள மகளிர் மற்றும் சிறார்கள் வளர்ச்சித் திட்டம்

8. மகளிருக்கான முத்ரா போஜனா திட்டம்
9. யூத் யோகினி திட்டம்
10. ஊரக இளைஞர்களின் சுய தொழில் பயிற்சித் திட்டம்

கூடுதலாக இந்திய மகளிர் தொழில் முனைவோர் கூட்டமைப்பு மகளில் தொழில் முனைவிற்கான பல வசதிகளைச் செய்து தருகின்றது.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின். (குறள் 120)

பிறர் பொருளாக இருப்பினும் அதனைத்
தன் பொருளைப் போலவே கருதி
நேர்மையுடன் வாணிகம் செய்தலே
வணிக நெறியெனப்படும்.



# 3. தொழில் முனைவின் முக்கியத்துவம்

பின்னலாடைக்குப் பெயர் பெற்ற திருப்பூர், சிறிய சிறிய இயந்திரச் சாதனங்கள், லேத் பட்டறைகளுக்குப் பெயர் பெற்ற கோயம்புத்தூர், மஞ்சள் வணிகத்திற்குப் பெயர் பெற்ற ஈரோடு, ரப்பர் பொருட்களின் மையமான மற்றும் ஜெட் பம்புகளின் தாயகமான மதுரை, இந்தியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படும் சென்னை, தோல் பொருட்கள் வணிகத்தில் விஞ்சி நிற்கும் ஆம்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள். இவை கூறும் செய்திகள் என்ன? தொழில் முனைவோர்களின் சொர்க்கங்கள் அல்லவா இந்த நகரங்கள்? இந்த நகரங்களில் மக்களின் வாழ்வாதாரங்கள், மக்கள் மத்தியில் இருக்கும் பணப்புழக்கம், மக்கள் தொகை நெருக்கம், பலாப்பழம் ஈக்களை ஈர்ப்பது போலத் தொழில் முனைவோராக மற்றும் அவர்கள் நிர்மாணிக்கும் தொழில் நிறுவனங்களில் வேலை செய்ய என்று இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வரும் தொழிலாளர் கூட்டம், தொழில் முனைவைப் பற்றிய பின் வரும் கருத்துக்களுக்கு நாம் வர இந்த நிறுவனங்கள் காரணமாக இருக்கின்றன.

தொழில் முனைவு என்பது

1. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை நிற்கின்றது.
2. மாற்றுச் சிந்தனையையும், படைப்பாற்றலையும் ஊக்குவிக்கின்றது.
3. பொருட்களும் சேவைகளும் மக்களுக்குத் தடையில்லாமல் கிடைக்கும்படிப் பார்த்துக் கொள்கின்றது.
4. ஒட்டு மொத்தச் சமூக வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு உதவியாக இருக்கின்றது.
5. வேலை வாய்ப்பைப் பெருக்குகின்றது.

6. செல்வ வளம் பெருக்குகின்றது.
7. சமூகத்தில், மக்கள் மத்தியில் பணப்புழக்கம் அதிகமாக உதவுகின்றது.
8. தொழில்நுட்பப் புரட்சிக்கு வித்திடுகின்றது.
9. புதிய புதிய பொருட்களும், புதிய, புதிய சேவைகளும் உருவாகக் காரணமாகின்றது.
10. உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்க உதவுகின்றது.
11. தனி மனித வருமானம் கூட உதவுகின்றது
12. நாட்டின் ஏற்றுமதி உற்பத்தி கூட உதவுகின்றது. அதனால் அன்னியச் செலாவணியும் அதிகரிக்கின்றது.
13. மக்கள் மத்தியில் தூங்கிக் கொண்டிருக்கும் சேமிப்பைத் தொழிலுக்கான மூலதனமாக மாற்றுகின்றது.
14. சிறு குறு நிறுவனங்கள் கூட்டுச் சேர்ந்து பெரு நிறுவனமாக வளரவும் வழி வகுக்கின்றது.

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். (குறள் 754)

தீய வழியை மேற்கொண்டு திரட்டப்படாத செல்வம்தான்
ஒருவருக்கு அறநெறியை எடுத்துக்காட்டி,
அவருக்கு இன்பத்தையும் தரும்.

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை. (குறள் 758)

தன் கைப்பொருளைக்கொண்டு
ஒரு தொழில் செய்வது என்பது யானைகள் ஒன்றோடொன்று போரிடும் போது
இடையில் சிக்கிக் கொள்ளாமல் அந்தப் போரை
ஒரு குன்றின் மீது நின்று காண்பதைப் போன்று இலகுவானது.

செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல். (குறள் 677)

ஒரு செயலில் ஈடுபடுகிறவன்,
அச்செயல் குறித்து முழுமையாக உணர்ந்தவனின்
கருத்தினை முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.



# 4. தொழில் முனைவோர் கொள்ள வேண்டிய குணாதிசயங்கள்

பணம் பந்தியிலே, குணம் குப்பையிலே என்று ஒரு சினிமாப் பாடல் வரி உண்டு. ஆனால் குணங்கள் ஒரு தொழில்முனைவோரைக் குன்றேறி நிற்க வைக்கும். என்ன மாதிரியான குணங்களைத் தொழில் முனைவோர் கைக்கொள்ள வேண்டும் என்று பார்ப்போம்.

**1. காதலன்**

இவன் சினிமாக் காதலன் அல்ல. தன் தொழிலை, தான் உற்பத்தி செய்யும் பொருளை அல்லது சேவையை, அந்தக் களத்தை மனதார நேசிப்பவன் இவன். தன்னுடன் வேலை பார்ப்பவர்களை, வாடிக்கையாளர்களை, தனக்குச் சரக்குகள் விநியோகம் செய்பவர்களை என்று தன் தொழில் சம்பந்தப்பட்ட அனைவரையும் நேசிப்பவன் இவன். எப்படி ஒரு விவசாயி தன் விளைபொருட்களையும், விளை நிலத்தையும் நேசிப்பானோ அது போன்றவன் இவன். ஆக, தொழில் முனைவோர்களுக்கான முதல் யோசனை, ஆதலினால் உங்கள் தொழிலைக் காதல் செய்வீர்!

**2 தொலைநோக்கன்**

சற்றே தள்ளிப் பார்ப்பது இவன் குணம். எவ்வளவு தூரம் தள்ளிப் பார்க்க வேண்டும்? நிறுவனம் ஆரம்பிப்பதற்கு முன்பே, நிறுவனத்தைப் பற்றியும், உற்பத்தி அல்லது விற்பனை செய்யக் கூடிய பொருட்களைப் பற்றியும், அந்த நிறுவனம் செய்ய இருக்கும் வணிகச் சேவைகளைப் பற்றியும், அவைகளுக்கான வாடிக்கையாளர்கள் பற்றியும், அதனால் சமுதாயம் பெறப் போகும் பலன்கள் பற்றியும் முன்கூட்டியே சிந்திப்பவன் இவன். இவனது

தொலைநோக்கால் இவன் எடுத்து வைக்கும் சிங்க நடைகள் சிகரத்தைத் தாண்டுவதும், அதையும் கடந்து வானத்தை எட்டிப் பிடிப்பதும் சாத்தியம் தானே.

### 3. இவன் ஒரு தோனி

எப்படி? கிரிக்கெட் மைதானத்தில் அனைத்து விஷயங்களும் எதிராக இருந்தாலும், விளைவுகளைப் பற்றிக் கவலைப் படாது நிதானமாகத் தன் அடிகளை எடுத்து வைக்கும் தோனி போல இவன் இருப்பது அவசியம். வாணிபத்தில் எத்தனை பிரச்சனைகளைச் சந்தித்தாலும் எதிர்பாராத விஷயங்களை எதிர்கொண்டாலும் தன் நிலையில் திரியாது அல்லது எந்த மாற்றமும் இல்லாமல் இருப்பவன் இவன். இவனை நினைத்துத்தான் வள்ளுவர்,

*நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்*
*மலையினும் மானப் பெரிது (124)* என்று சொன்னாரோ?

### 4. பூமித்தாயோ இவன்

*அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல் தம்மை*
*இகழ்வாரைப் பொறுத்தல் தலை(151)* என்று வள்ளுவர் கூறுகின்றார். தன்னையே தோண்டும் ஒருவனைக் கூடப் பொறுமையாகத் தாங்கும் குணம் பூமித் தாய்க்கு உண்டு. அதுபோலத் தொழிலை ஆரம்பித்ததால் தம்மை இடித்துரைப் பவர்கள், ஏகடியம் பேசுபவர்கள், வேண்டுமென்றே பிரச்சனை தருபவர்கள் என்று அனைவரையும் பொறுத்துக் கொள்ளப் போகும் பொறுமை இவனுக்கு இருப்பதால் இவன் பூமித்தாய் தான்.

### 5. தன்னம்பிக்கை நாயகன் இவன்

இடர் பல வரினும் எடுத்த காரியத்தை விடாது செயல்படுத்தும் முனைப்புடன் இருப்பவன் இவன். இலக்கை நோக்கிய தனது அடுத்த அடியை எடுத்து வைத்துப் பயணித்துக் கொண்டே இருப்பவன். ஒரு வகுப்பறையில் பள்ளி ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்கு கேள்வித் தாள்களைக் கொடுத்து அவர்கள் என்ன பார்க்கின்றார்கள் என எழுதச் சொல்கின்றார். அந்தக் கேள்வித் தாளில் இருந்தது சரியாக நடுப்பக்கத்தில் ஒரு கரும் புள்ளி.

மாணவர்கள் விடையை எழுதிக் கொடுத்த பிறகு சத்தம் போட்டு வாசிக்கின்றார். அனைவரும் சொல்லி வைத்தமாதிரி கரும்புள்ளி என்றும், அது எங்கு இருக்கின்றது என்றும் விளக்க

முயன்றிருந்தனர். வாழ்க்கையிலும் நம்மில் பலர் நாம் அவ்வப்போது சந்திக்கும் பிரச்சனைகளை, உடல் உபாதைகளைப் பற்றித் தான் எண்ணிக்கொண்டிருக்கின்றோம். அந்த வெள்ளைப் பக்கம் போன்று பல ஆசீர்வாதங்கள் நமக்கு வாழ்க்கையில் கிட்டி இருந்தாலும், பிரச்சனைகளான கரும் புள்ளிகளில் தான் நாம் கவனம் செலுத்துகின்றோம். நம் நாயகன் அப்படி அல்ல. இவன் ஆசீர்வாதங்களைக் கொண்டாடுபவன். அதனால் தன்னம்பிக் கையின் மொத்த உருவமாகத் திகழ்கின்றான்

### 6. நெருப்பா? இளநீரா?

குற்றம் கண்டு கோபத்தைக் கொட்டும் நெருப்பாளியா? அல்லது இளநீர் போன்று குளிர்ந்த வார்த்தைகளை உதிர்ப்பவனா?

ஆட்களைக் குறை சொல்லல் கூடாது, குற்றங்களை மட்டுமே கடிந்து கொள்ள வேண்டும் என்ற நிர்வாக உத்திக்குச் சொந்தக்காரன். தன் மகன் தேர்வுகளில் மதிப்பெண்கள் குறைய வாங்கியிருந்தால், முட்டாள், மடையன் எனத் திட்டாது வாங்கியிருக்கும் மதிப்பெண்கள் போதுமானதாக இல்லை என்பான். தவறு செய்த வேலையாளிடம், அறிவிருக்கா? இதைக் கூட ஒழுங்காகச் செய்யத் தெரியவில்லையா என்று திட்டுவதை விடுத்து அந்தத் தவறு தனக்கு உடன்பாடாக இல்லை என்று தவறை மட்டும் குறை கூறுவான். கோபம் கொண்டு ஆட்களைக் கடிந்து கொள்வதை விடக் குற்றங்களைக் குறை கூறுவது சிறந்த பலன் விளைவிக்கும் என அறிந்தவன் இவன். சினம் தவிர்ப்பவனும் இவனே.

### 7. ஆபத்தை எதிர்கொள்பவனா?

பிரச்சனைகள் இல்லாத வீடுகள் உண்டா? அதுபோல தொழில் என்றாலும் பிரச்சனைகள் அழையா விருந்தாளிகளாக வரும் அல்லவா? ஏன் எதிர்பாரா ஆபத்துகளும் கூடி வரும். அவைகளை எண்ணினால் அடுத்த அடி எடுத்து வைக்க இயலுமா? இடுக்கண் வருங்கால் நகுக என்பர். அடுத்த அடியை எண்ணிப் பயந்த பஸ் ஆல்டுரின் சரித்திரப் புத்தகத்தில் சந்திரனில் முதலில் கால் எடுத்து வைத்த மனிதன் என்ற பெயர் பெறும் வாய்ப்பினை இழந்தார். ஆனால் அடுத்ததாக வாய்ப்பளிக்கப்பட்ட நீல் ஆம்ஸ்ட்ராங் கொஞ்சமும் தயங்காமல் சந்திரனில் தனது முதல் அடியை எடுத்து வைத்தார். சரித்திரத்திலும் இடம் பிடித்தார். நம்மவனும் இதுபோலச் சிரித்த முகத்துடன் ஆபத்துக்களை எதிர்கொள்பவன் தான்.

**8. இவன் நாணலோ?**

பேய்க் காற்றும் சூரைக் காற்றும் அடித்தால் நெடிதுயர்ந்து நிற்கும் ஆலமரம் கூட உடைந்து விழுந்து விடும். ஆனால் நாணலோ எவ்வளவு வேகமாகக் காற்றடித்தாலும் சற்றே வளைந்து நிமிர்ந்து தன்னைத் தற்காத்துக் கொள்ளும். அதனால்தான் சுவாமி விவேகானந்தர் பணியக் கற்றுக் கொள், கட்டளையிடும் பதவி தேடி வரும் என்றார்.

**9. நேர்மறை சிந்தனையோன்**

ஒரு சமயம் ஒரு கடற்கரையில் ஆயிரக்கணக்கான நட்சத்திர மீன்கள் கரையோரம் ஒதுங்கிக் கிடந்தன. சிறுவன் ஒருவன் ஒவ்வொரு நட்சத்திர மீனாக எடுத்துக் கடலுக்குள் எறிந்து கொண்டிருந்தான். அங்கு வந்த பெரியவர் ஒருவர் அவனைப் பார்த்து பிரயோசனமில்லாத வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றாயே என்றார். அவனோ, தான் திரும்பக் கடலுக்குள் எறியும் மீன்களின் வாழ்வில் ஒரு மிகப் பெரிய மாற்றத்தைச் செய்து கொண்டிருக் கின்றேன் என்றான். அந்தப் பையன் போல் நம்மவனும் நேர்மறை சிந்தனை உடையவன்.

**10. உன்னிடத்தில் நான் என்னிடத்தில் நீ**

சொல்வது எளிது. ஆனால் செய்வது கடினம். நாள் முழுவதும் வீட்டு வேலைகளைப் பார்க்கும் நமது குடும்பப் பெண்களுக்கு அதற்குரிய அங்கீகாரமோ, பாராட்டுக்களோ பெரிதாகக் கிடைத்து விடுவதில்லை. காரணம் அவர்கள் நிலையில் வைத்து பிறர் அவர்களைப் பார்ப்பதில்லை என்பது தான். பிள்ளைகள் பள்ளிக்கு வந்து படிக்க வேண்டும் என ஆசைப்பட்டார் காமராசர் அவர்கள். சாப்பிட உணவு கிடைக்காத அவர்கள் நிலையில் அவர் தன்னை வைத்துப் பார்த்ததால் தான் மதிய உணவு பிறந்து இன்று சத்துணவாக வளர்ந்து தமிழ்நாட்டின் படித்தவர்கள் எண்ணிக்கையை அதிகமாக்கியுள்ளது. நம்மவனோ வாடிக்கையாளர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்து அவர் தேவைகளை அறிந்து தனது தொழிலை மேலெடுத்துச் செல்வான்.

**11.நானே காரணம்**

மிகவும் அரிதாகக் கேட்கப்படும் வாசகம். நான் காரணம் இல்லை. இந்த பேட் சரியில்லை என்று பேட்ஸ்மேன் கூறுவதும், நான் காரணம் இல்லை கேள்வித்தாளைக் கடினமாகக் கேட்டு

விட்டார்கள் என்று மாணவன் கூறுவதும். முள்ளின் மீது நடந்து விட்டு முள் குத்திவிட்டது என்று முள்ளின் மீது பழிபோடுபவர்கள் எப்படித் தன் தவறுக்குத் தான் காரணம் எனப் பொறுப்பேற்பார்கள். எங்கோ அரியலூரில் நடந்த இரயில் விபத்திற்கு தலைவனான தானே காரணம் என்ற லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் வாழ்ந்த காலத்தில் நாம் வாழவில்லையே? நம்மவனோ தன் செயல்களுக்குத் தானே காரணம் மற்றும் பொறுப்பு என்று கட்டியம் கூறி அதற்கு உதாரணமாக நிற்பவன் அல்லவா?

**12. ஆர்வன்**

தனது நோக்கத்தை, அதனால் எடுத்துக் கொண்ட காரியத்தை மிகவும் பேரார்வத்துடன், வேட்கையுடன் செய்பவன். எப்படி ஓர் இராக்கெட்டிற்கு புவிஈர்ப்பு விசையை மீறிப் பறக்க விடுபடுதிசை வேகம் உதவுகின்றதோ அதுபோல இவனும் எத்தனை இடர்கள் வந்தாலும் பேரார்வத்துடன், விடுபடு திசை வேகத்துடன் அவைகளைக் கடந்து மேற்செல்வான்

**13. விடாமுயற்சி விஸ்வரூப வெற்றி**

இது ஒரு திரைப்பட வாசகமாக இருந்தாலும் ஒரு தொழில் முனைவோர் தனது விடா முயற்சியால் வெற்றிகளைத் தன் பக்கம் ஈர்க்கின்றான் என்பது தான் உண்மை. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அடக்கு முறையை அகிம்சையால் வெல்வோம் என காந்தியவர்கள் கூறினால் கூட விடாமுயற்சியுடன் காங்கிரஸ் தொண்டர்கள் அதைப் பின்பற்றியதால் தான் நமக்குச் சுதந்திரம் கிடைத்தது என்பர். இங்கு இவனும் ஒரு விடாமுயற்சியாளன்

**14. மாற்றுச் சிந்தனையாளன்**

எங்கோ நடக்கும் கிரிக்கெட் மேட்ச்சை தனது வீட்டுச் சுவரில் பார்ப்பதாகக் கனவு கண்ட ஒருவனின் மாற்றுச் சிந்தனை தான் இன்று நம் வீடுகளில் அமர்ந்து கொண்டு எங்கோ அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் நடந்து கொண்டிருக்கும் விளையாட்டுப் போட்டிகளை நேரடியாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

அப்துல் கலாம் அவர்களின் மாற்றுச் சிந்தனைதான் ஆகாய விமானம் செய்யப் பயன்படும் டியூரலுமினை வைத்து மாற்றுத் திறனாளிகளின் நடைகளை எளிமையாக்க முடிந்தது. நம்மவனும் ஒரு மாற்றுச் சிந்தனையாளன் தான்.

### 15. பீனிக்ஸ் பறவை

*சாம்பலிலிருந்து பீனிக்ஸ் பறவை உயிர்த்தெழுவது போலத் தோல்விகள் பல கண்டாலும் அதிலிருந்து திரும்பத் திரும்ப மீண்டு வந்து சாதிப்பவன் இவன்.*

*ஹீரோஷிமா, நாகசாகி என்ற மிகப் பெரிய அழிவுகள், அவ்வப்போது நிலநடுக்கம், சுனாமி என ஆபத்துக்களிடையில் பாதிப்புகளுக்குப் பல முறை உண்டானாலும் இன்று உலக அரங்கில் மிகப் பெரிய பொருளாதார வல்லரசாக உயர்ந்து நிற்கும் ஜப்பான், பீனிக்ஸ் பறவை. நம்மவனும் ஒரு பீனிக்ஸ் பறவை தான். அமெரிக்க ஏகாதி பத்தியத்தையே எதிர்த்து இன்று கல்வியையும், மருத்துவத்தையும் தனது மக்களுக்கு இலவசமாக வழங்கிக் கொண்டிருக்கும் கியூபாவும் மற்றுமொரு உதாரணம்.*

### 16. நேர்மையாளன்

*நேர்மை, நியாயம் என வாய்வார்த்தைகள் பேசிக்கொண்டிருப்பவன் அல்ல இவன். அரசுக்குக் கட்ட வேண்டிய வரியை நியாயமாகக் கட்டுபவன். தன்னை நம்பியிருக்கும் வாடிக்கையாளர்களை எள்ளளவும் ஏமாற்ற நினையாதவன். நேர்மையும், நியாயமும் இவனது தனிப் பெரும் சொத்துக்கள்.*

*மதுரையில் மாரியப்ப நாடார் இரும்புக்கடை என்ற ஒரு கடை உண்டு. ஒரு சிறுவன் சென்று பொருள் கேட்டால் கூட அளவு குறையாது, விலை கூடாது, என்பது அவர்கள் நேர்மைக்குக் கிட்டிய பெயர். டாட்டா குழுமத்திற்கு அறம் அல்லா வணிகச் செயல் பாடுகள் அவர்களிடம் இல்லை என்ற நல்ல பெயர் உண்டு.*

*பத்து சக்கரை ஆலைகளைக் கூட்டுறவுச் சங்கங்களுக்காகத் தமிழக அரசு ஜப்பானிடமிருந்து வாங்குகின்றது. முதல்வர் காமராசர் அவர்களுக்கு ஒரு ஆலைக்குரிய பணம் இலஞ்சமாகத் தர அந்த நிறுவனம் தயாராக இருக்கின்றது. நேர்மைக்கு உதாரணமான காமராசர் அவர்களோ அந்தப் பணத்தில் இன்னொரு சர்க்கரை ஆலை அமைத்துக் கொடுங்கள் என்றார். மோகனூரில் அமைந்த சர்க்கரை ஆலை தான் அது.*

### 17. கடின உழைப்பாளி

*மணலைக் கயிறாகத் திரிக்க முடியுமா? பாறையில் நார் உரிக்க முடியுமா? இவன் செய்வான். இவனது கடின உழைப்பு அனைத்தையும் சாதிக்க வைக்கும்.*

மேலே கூறப்பட்டுள்ள குணாதிசயங்களை இவன் பெற்றுள்ளதால் இவன் பிறரிடமிருந்து தனித்துத் தெரிவான். வல்லமை பெற்ற இவன் வளம் பல பெறுவான். தன்னைச் சுற்றியுள்ளோரையும் சமூகத்தையும் வளம் பெற வைப்பான்.

### 4.1 குணாதிசயங்கள் ஓர் ஆய்வு

கீழே காணும் குளாதிசயங்கள் உங்களிடம் உள்ளனவா? அப்படி இருந்தால் நீங்கள் கொடுக்க இருக்கும் மதிப்பெண்கள்

| **எனது தனித்துவம்** | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| 1. ஆர்வம் | | | | | | |
| 2. நிதானம் | | | | | | |
| 3. தொலைநோக்குப் பார்வை | | | | | | |
| 4. தன்னம்பிக்கை | | | | | | |
| 5. மாற்றுச் சிந்தனை | | | | | | |
| 6. கடின உழைப்பு | | | | | | |
| 7. ஆபத்தை எதிர்கொள்ளல் | | | | | | |
| 8. விடாமுயற்சி | | | | | | |
| 9. பொறுமை | | | | | | |
| 10. நேர்மை | | | | | | |
| 11. பீனிக்ஸ் பறவை | | | | | | |
| 12. பொறுப்புணர்வு | | | | | | |
| 13. உன்னிடத்தில் நான் | | | | | | |
| 14. நேர்மறை சிந்தனை | | | | | | |
| 15. பணிவு | | | | | | |
| 16. நிலையில் திரியாது இருத்தல் | | | | | | |
| 17. சினம் தவிர்த்தல் | | | | | | |
| மொத்த மதிப்பெண்கள்: | | | | | | |


RAMS ELECTRIC
P (MOVING POINT
LOCUS OF
FIXED POINT
π

# 5. தொழில் முனைவோருக்கான இலாவகங்கள்

தொழில் முனைவோருக்கான திறன்கள் அல்லது இலாவகங்களில் மென் திறன்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. அவைகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்

**1. தொடர்பாற்றல் கலை விற்பன்னர்**

தொடர்பாற்றல் என்பது ஒரு நிர்வாகத்தின் இரத்த ஓட்டம் என்று நிர்வாக உலகின் தந்தை பீட்டர் டிரக்கர் அவர்கள் கூறுவார். வாடிக்கையாளர்கள், நம்முடன் வேலை பார்ப்பவர்கள், நமக்குச் சரக்கு வினியோகம் செபவர்கள், நமது ஆலோசகர்கள் என்று இவர்கள் அனைவரிடமிருந்தும் நாம் வேண்டுவன பெறுவதற்கு தொடர்பாற்றல் கலையில் விற்பன்னராக இருத்தல் அவசியம். தொடர்பாற்றல் என்பது பேசுவது மட்டுமல்ல பிறர் பேசுவதைக் கவனிப்பதும் தான்.

**2. முடிவெடுப்பதில் முனைப்பு**

தவறான முடிவுகள் நம்மை அழிவுப் பாதையில் தள்ளி விடும் என்பதற்குத் தசரத மகாராஜா எடுத்த இரண்டு முடிவுகள் உதாரணம். ஆக, முடிவெடுப்பதற்கு முன் பிரச்சனையை அறுதியிட்டுப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான பல உபாயங்களை அலசி ஆராய்ந்து அவைகளில் இருந்து ஒரு உபாயத்தைத் தேர்ந்தெடுத்து அதைச் செயல்படுத்தி விளைவு வெற்றியானால் தொடரவும், வெற்றி கிட்டாவிட்டால் ஏற்கனவே பார்த்து வைத்திருக்கும் உபாயங்களில் வேறு ஒன்றைத் தேர்ந்தெடுத்து மறுபடியும் செயல்படுத்தவும் தெரிந்திருக்க வேண்டும்.

### 3. கால நிர்வாகம் கைகூடல் வேண்டும்

*ஞாலம் கருதினும் கைகூடும் காலம்*
*கருதி இடத்தார் செயின் (484)*

காலம் கருதிச் செய்தால் உலகமே கைக்குள் வரும் என்று வள்ளுவன் கூறுவார். போர்டு அவர்களோ சுறுசுறுப்பான மனிதனுக்கு அனைத்து வேலைகளுக்கும் நேரம் இருக்கும் என்பார்.

நேர நிர்வாகம் பற்றிய இன்றைய சித்தாந்தம் நேரத்தை நிர்வகிப்பது அல்ல, அவரவரை நிர்வகிப்பது தான். அதாவது தம்தம் செயல்களை முன்னுரிமைப் படுத்திச் செயல்படுத்துவது தான் என ஸ்டீவன் கோவி அவர்கள் கூறுவார்.

அவசரம் இல்லாவிட்டால் கூட அவசியமான முக்கியமான விஷயங்களை அவ்வப் பொழுது முன்னுரிமைப் படுத்திச் செய்து வந்தால் அவசரம் மற்றும் முக்கியம் என்ற நிலைக்குச் சென்று அதாவது காலில் வெந்நீர் ஊற்றிச் செயல்படும் நிலைக்குச் சென்று வருந்திட வேண்டாம்.

### 4. மாற்றுச் சிந்தனை

வெளியே மொறுமொறுப்பாகவும் உள்ளே மிருதுவாகவும் இருக்கும் கோழிக்கறி என்ற 60 வயதிற்கு மேலான கர்னல் சான்டர்ஸ் அவர்களின் மாற்றுச் சிந்தனை தான் கென்டக்கி பிரைடு சிக்கனை வெற்றி பெற வைத்தது.


ஏற்கனவே நாம் பார்த்த மாற்றுத் திறனாளிகளுக்காக விமானம் செய்யப்படும் டியூரலுமினியத்தில் செய்யப்பட்ட செருப்புகள் மாற்றுச் சிந்தனைக்கு மற்றுமொரு உதாரணம்.

தவறுதலாக உப்பு மூடையும் சீனி மூடையும் கலந்து விட ஏன் இந்த சுவையைச் சந்தைப் படுத்தலாமே என்ற மாற்றுச் சிந்தனை தான் கிராக் ஜாக் 50/50 பிஸ்கட்டுகளை வெற்றியடையச் செய்தது.

மாற்றுச் சிந்தனையால் வாடிக்கையாளர்களின் தேவைகளைச் சரியான வகையில் நிறைவேற்ற இயலும்.

### 4.1 உங்கள் மாற்றுச் சிந்தனையைச் சற்றே சோதிக்கலாம்

பின்வரும் ஒன்பது புள்ளிகளைக் கையை எடுக்காமல் நான்கு நேர் கோடுகளால் இணைக்கவும்.



**5. ஆதாரம் திரட்டுதல்**

ஒரு தொழில் முனைவோருக்கு மிக முக்கியமான தேவை ஆதாரம் திரட்டுதல். அது ஆட்களைத் திரட்டுவதாக இருந்தாலும் சரி, மூலதனத்தைத் திரட்டுவதாக இருந்தாலும் சரி, அவருடைய இந்தத் திறன் அவர் எடுத்துக்கொள்ளும் கொள்ளும் தொழிலை மேம்படுத்தும்

பெரிய கூட்டத்தைக் கூட்ட முடிந்த அரசியல்வாதி, கும்பாபிஷேகத்திற்கு நிதி சிறப்பாகத் திரட்டும் ஒரு நபர் போன்றவர்களை இந்த வகையில் சேர்த்துக் கொள்ளலாம்.

**6. திட்டமிடல்**

திட்டமிடத் தவறும் ஒருவரை அவர் தோல்வியடைவதற்காகத் திட்டம் போட்டிருக்கின்றார் என்பர். எந்த ஒரு பொருளும், செயலும் இரண்டு முறை உற்பத்தியாகின்றன என்பர். ஒன்று மனதில் மற்றொன்று நிஜத்தில். ஒரு வீடு கட்டவேண்டுமென்றால் கட்டடம் கட்டுவதற்கு முன் காகிதத்தில் வரைபடம் போடுகிறோம் அல்லவா?

ஆக, எந்த ஒரு செயலுக்கும் திட்டமிடல் அவசியம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

**7. நிதானம் தவறாமை**

தொழில், சூழல் பல இடையூறுகளைக் கொடுக்கும். பலப்பலப் பிரச்சனைகளைச் சந்திக்க வைக்கும். கோபம், எரிச்சல் தோன்றுவதற்கான பல காரணங்கள் இருக்கும். ஆனால் நிதானமாக அவைகளைக் கையாளும் பொழுது ஒரு தொழில் முனைவோர் மிளிர்கின்றார்.

எவ்வளவு இக்கட்டான சூழலாக இருந்தாலும் தோனி அவர்கள் அதை அணுகும் முறை அவரை ஐஸ் மனிதர் என்று அழைக்க வைக்கின்றது.

ஒரு சமயம் அன்னை தெரசா அவர்கள் ஒரு செல்வந்தரிடம் நன்கொடை வாங்கச் சென்றிருந்தார். நன்கொடைக்காக நீட்டிய அவரது வலது கையில் அந்தச் செல்வந்தர் காறி உமிழ்ந்து விடுகின்றார். அன்னை தெரசாவோ இன்முகத்துடன் இது எனக்குப் போதும், எனது குழந்தைகளுக்கு ஏதாவது கொடுங்கள் என்று தனது இடது கையை நீட்டுகின்றார். வெட்கித் தலைகுனிந்த அந்தச் செல்வந்தனோ ஒரு கோடிப் பணத்தை அந்தக் கையில் வைத்தான் என்று சொல்வார்கள். இங்கு அன்னையின் நிதானம் தவறாத தன்மை தான் ஒரு மிகப் பெரிய நன்கொடையை அவர் அமைப்பிற்குப் பெற்றுத் தந்தது எனக் கூறவும் வேண்டுமா?

### 8. ஆபத்துக்களை எதிர்கொள்ளல்

ஒரு தொழில் முனைவோராக நமது பயணம் எப்பொழுதும் ராஜபாட்டையில் சென்று கொண்டிருக்காது. கற்களும், முட்களும், மேலும் பலவிதத் தடைகளும் இருக்கும் பாதையை எதிர்கொள்ளத் தேவை இருக்கும். முடிவுகள் தவறானால் அதளபாதாளங்களும் உறவாகும். என்ன செய்வது?

நேர்மறை சிந்தனை கை கொடுக்கும். நேர்மறையான அணுகுமுறையில் பொருத்தமான குணாதிசயத்துடன், தேவையான திறனுடன் அணுகும் பொழுது பல சமயங்களில் ஆபத்துக்கள் கூட மிகச் சிறந்த வாய்ப்புகளாக மாறிவிடக் கூடும்.

### 5.1 ஆபத்தை எதிர்கொள்ள விரும்புபவரா?

'ஆம்' அல்லது 'இல்லை' என்று பதிலளிக்கவும்

1. முதல் போட்டு தொழில் ஆரம்பித்தால் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் எனத் தெரியாது பணத்தை வைத்து ஆபத்தை எதிர்கொள்ள விரும்புபவரா? 'ஆம்' / 'இல்லை'
2. பயணம் செய்யும் பொழுது எப்பொழுதும் குடையும் தண்ணீர் பாட்டிலும் எடுத்துச் செல்பவரா? 'ஆம்' / 'இல்லை'
3. உங்களுக்கு எது சம்பந்தமாகவாவது பயம் இருந்தால் அந்தப் பயத்தை வெற்றி கொள்ள முயல்வீர்களா? 'ஆம்' / 'இல்லை'
4. புதிய உணவுகள், இடங்கள் என்று புதிதான அனுபவங்களை எதிர்கொள்ள விரும்புபவரா? 'ஆம்' / 'இல்லை'

5. ஒரு கேள்வி கேட்பதற்கு முன்பே அதற்கான விடையைத் தெரிந்திருக்க வேண்டும் என்று எண்ணுபவரா? 'ஆம்' / 'இல்லை'

6. கடந்த ஆறு மாதங்களில் ஏதாவது சவாலைச் சந்தித்துள்ளீர்களா? அதாவது ஆபத்தை விரும்பி எதிர் கொண்டுள்ளீர்களா? 'ஆம்' / 'இல்லை'

7. உங்களுக்கு முன்பின் தெரியாத ஒருவரிடம் சென்று அவருடன் இயல்பாகப் பேச ஆரம்பிக்க முடியுமா? 'ஆம்' / 'இல்லை'

8. இதுவரை பழக்கப்படாத ஒரு பாதையில் பயணித்த அனுபவம் உண்டா? 'ஆம்' / 'இல்லை'

9. நீங்கள் முயற்சி செய்வதற்கு முன்பே அது பிறரால் முயற்சி செய்யப்பட்டுள்ளதா என்பதை தெரிந்து கொள்ள விரும்புவீர்களா? 'ஆம்' / 'இல்லை'

10. ஆணோ, பெண்ணோ முன்பின் தெரியாத ஒருவரைச் சந்தித்துப் பேசி அவருடன் உறவை வளர்க்க முயற்சித்தது உண்டா? 'ஆம்' / 'இல்லை'


இதில் 2,5,9 கேள்விகளுக்கு ஆம் என்று பதில் அளித்து இருந்தீர்களேயானால் ஆபத்துக்களை எதிர்கொள்ள இன்னும் உங்கள் விருப்பத்தை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

---

**செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு**
**எய்த உணர்ந்து செயல். (குறள் 516)**

செயலாற்ற வல்லவனைத் தேர்ந்து,
செய்யப்பட வேண்டிய செயலையும் ஆராய்ந்த,
காலமுணர்ந்து அதனைச் செயல்படுத்தவேண்டும்.

---



# 6. அறம் சார்ந்த வணிகம்

நேர்மையாகத் தொழில் செய்தால் கஷ்டம் தான் என்று கூறுபவர்களும் இருக்கின்றனர். ஆனால் அறம் சார்ந்த வணிகம் என்றால் என்ன?

சட்டங்களுக்கு உட்பட்டு நடப்பது தான் அறம் சார்ந்த வணிகமா? குணா படத்தில் நடிகர் கமல்ஹாசன் அவர்கள் சொல்வது போல அதையும் தாண்டிப் புனிதமானது, புனிதமானது. சட்டங்கள் எதிர்பார்ப்பதை விடச் சிறந்து செயல்படுவது தான் அறம் சார்ந்த வணிகம். அதை மூன்று தூண்களின் வழியாக நான் பார்க்க விரும்புகின்றேன்.

**1. சுற்றுப்புறச் சூழல்**

திருப்பத்தூர், ஆம்பூர் பகுதிகளில் இருந்து தோல் பொருட்கள் ஏற்றுமதியால் நமது நாட்டிற்குக் கிடைக்கும் அன்னியச் செலாவணி அதிகம். ஆனால் அதற்குக் கொடுக்கும் விலை, அவர்கள் உபயோகிக்கும் இரசாயனங்களால் நிலத்தடி தண்ணீர் அங்கு வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இலாபம் அதிகம் கிடைத்தாலும் அறம் தவறிவிட்ட தொழில். இது மட்டுமல்ல கரூர் சாயப்பட்டறைகள் அங்கு ஓடும் ஆற்றையே மாசுபடுத்திவிட்டன. தங்களது சிம்னி வழியாகச் சுத்தப்படுத்தாத புகைகளை வெளியிடும் சிமெண்டுத்தொழிற்சாலை போன்ற பெரு நிறுவனங்கள் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக அல்லவா உள்ளன.

ஆக, அறம் சார்ந்த ஒரு தொழில் என்பது சுற்றுப் புறத்தை மாசுபடுத்தாத தொழில் என்றும் நாம் எடுத்துக் கொள்ளலாம்.

**2. நிர்வாகம்**

இங்கு நிர்வாகம் என்பது வேலைபார்ப்பவர்களை நல்லபடியாக நடத்துவது, வேலைபார்க்கும் இடத்தைப் பாதுகாப்பாகப் பார்த்துக் கொள்வது, மேலும் அரசாங்கம் எதிர்பார்ப்பது போலக் குறைந்த பட்சச் சம்பளம் கொடுக்காது, அவர்கள் வேலைக்குப் பொருத்தமான நியாயமான சம்பளம் கொடுப்பது, அதனால் அவர்கள் ஓரளவிற்கு வசதியாக வாழ முடிவது.

அப்படியானால் வேலைபார்ப்பவர்களுக்கு மட்டும் தானா? என்றால் இல்லை, தங்கள் நிறுவனத்திற்குப் பொருட்கள் விநியோகம் செய்பவர்களையும் சரியாக நடத்துவது. இதயம் நிறுவனத்தில் தங்களுக்கு வினியோகம் செய்யப்படும் எள் தரமாகவும் எதிர்பார்த்ததை விடக் கூடுதல் எண்ணெய் தருவதாக இருந்தால் அதற்கான சிறப்பு ஊக்கத் தொகையும் தருகின்றனர். சட்டப்படி இப்படிச் செய்யவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் இது அவர்கள் காக்கும் அறம்.

இது மட்டுமல்ல தங்களுக்குச் சரக்கு விநியோகம் செய்பவர்கள் அறம் சார்ந்து செயல்படுகின்றார்களா என்பதையும் பார்ப்பது அவசியம். உதாரணத்திற்கு அவர்கள் குழந்தைத் தொழிலாளர்களை வைத்துள்ளார்களா? சட்டம், அனுமதிக்காத ஏதாவது ஒரு முறையில் பொருட்களைத் தயாரிக்கின்றார்களா? என்றெல்லாம் பார்த்தல் அவசியம்.

நிர்வாகத்தின் இன்னொருபகுதி முறைப்படி வரியைக் கட்டுவது. நான் வரியை ஏமாற்றுவதில்லை, ஆனால் வரி வராமல் பார்த்துக் கொள்கிறேன் என்று சிலர் கூறுவர். ஆனால் அது சரியல்ல.

வரியை முறைப்படி செலுத்தும் பொழுது உங்களுக்கென்று சமூகத்தில் தனித்த ஓர் அடையாளம் கிடைக்கின்றது. உங்கள் பொருட்களுக்கு மதிப்புக் கூடுகின்றது. ஏற்கனவே பகிர்ந்துள்ள படி டாட்டா நிர்வாகம் வரியை ஏய்க்கும் அல்லது வரியை விலக்கும் எந்த ஒரு வழியையும் பின்பற்றுவதில்லை என்று அவர்களுக்கு ஒரு பெயர் உண்டு.

**3. சமூகம்**

தங்கள் நிறுவனம் எந்தச் சமூகத்தில் இருக்கின்றதோ அந்தச் சமூகத்தின் வளர்ச்சிக்கு, மேம்பாட்டுக்குப் பங்களிப்பதும் இதன்

*கடமை. மிக முக்கியமானது, தரமான பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு விநியோகம் செய்வது.*

*ராம்கோ நிறுவனமானது தங்கள் ஆலைகளைச் சுற்றியுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவ மாணவியருக்கு வருடம் ஒருநாள் இலவச வாழ்க்கைத் திறன் பயிற்சி நிகில் அறக்கட்டளை உதவியுடன் நடத்துகின்றது. இது இந்தத் தூண் சம்பந்தப்பட்டது தான்.*


*மேற்படி மூன்று தூண்களின் மீது தான் அறம் சார்ந்த வணிகம் சரிவரச் செயல்படும்.*

---

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு. (குறள் 578)

கடமை தவறாமையிலும்,
கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு
இந்த உலகமே உரிமையுடையதாகும்.

---


"Success is a lousy teacher. It seduces smart people into thinking they can't lose."
BILL GATES

# 7. கடைசி பெஞ்ச் மாணவர்களும் கடைந்தேற முடியுமா?

மைக்ரோ சாப்ட் நிறுவனத்தின் பில் கேட்ஸ் அவர்கள் படிப்பில் பெரிதாகச் சோபிக்கவில்லை. ஆனால் அவருடன் படித்து முதல் மாணாக்கனாகத் தேர்வு பெற்றவர் அவர் நிறுவனத்தில் தலைமை நிர்வாகியாக வேலை பார்க்கின்றார்.

பாடப் படிப்பிற்கும் தொழிலுக்கும் பெரிதும் சம்பந்தமில்லை என்பர். நான் அப்படிச் சொல்ல வரவில்லை. படிக்காத 10 பேர் ஜெயித்த உதாரணம் கூறினால் படித்த 1000 ஜெயித்த உதாரணங்கள் கூறலாம். நான் இங்குக் கூறவருவது, நான் நன்றாகப் படிக்க வில்லை என்று இப்பொழுது வருந்த வேண்டாம். ஒரு தொழில் முனைவோராக நீங்கள் மாற வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன.

ஒரு சமயம் இங்கிலாந்து நாட்டில் தேவாலயத்தில் மணி அடிப்பவர்கள் கையெழுத்துப் போடத் தெரிந்திருக்க வேண்டும் என்று ஒரு சுற்றறிக்கையை அனுப்பினர். பெர்ஜர் என்ற மனிதர் அதனால் தேவாலயத்தை விட்டு வெளியே அனுப்பப்பட்டார். அவருக்குப் புகை பிடிக்கும் பழக்கம் உண்டு. வேலை போய் விட்ட துன்பம். புகைப்பிடிக்க எண்ணுகின்றார். கையில் சிகரெட் இல்லை. சுற்றிக் கூப்பிடு தூரத்தில் எந்தக் கடையும் இல்லை.

ஒரு சிகரெட் கடையை ஆரம்பிக்கின்றார். கொஞ்சம் கொஞ்சமாகக் கடை வளர்ந்து ஒரு சூப்பர் மார்க்கெட்டாக மாறிப் பின் பல சூப்பர் மார்க்கெட்டுகளுக்கு அதிபராக ஆகின்றார். வருமானத்தையெல்லாம் மூட்டைகளாகக் கட்டிக் கடையிலேயே வைத்துள்ளார். வங்கியில் சேமிப்பது இல்லை.

இதை அறிந்த வங்கி அதிகாரி ஒருவர் அவரை அணுகித் தான் உதவி செய்கிறேன் என்று அவரிடமிருக்கும் பணத்தையெல்லாம் எண்ணிப் படிவத்தை நிரப்பி அவரிடம் கையெழுத்துக் கேட்கின்றார்.

அவரோ தனக்குக் கையெழுத்து போடத் தெரியாது என்று சொல்ல, வங்கி அதிகாரியோ, கையெழுத்துப் போடத் தெரியாமலேயே இவ்வளவு சிறந்த நிலைக்கு வந்து இருக்கின்றீர்கள், கையெழுத்து மட்டும் உங்களுக்குப் போடத் தெரிந்திருந்தால் என்று ஆச்சரியமாகக் கேட்கிறார். அதற்கு பெர்ஜரோ, நண்பரே நான் இன்னும் சர்ச்சில் மணியடித்துக் கொண்டிருப்பேன் என்றார். இங்கு நான் வலியுறுத்துவது என்னவென்றால் படிப்பு வராவிட்டாலும் தொழில் வரும் என்ற நம்பிக்கையைத் தான்

தேவை தானும் ஒரு தொழிலதிபராக வேண்டும் என்ற ஒரு நோக்கம் தான். அது சரியாக இருந்தால் உதவிகள் தேடி வரும். நாங்கள் நிகில் அறக்கட்டளை ஆரம்பித்த பொழுது என்ன செய்ய வேண்டும், எங்கள் நோக்கம் என்ன, என்ற தெளிவு இருந்ததே ஒழிய அதற்கான நிதி ஆதாரம் என்னிடம் உள்ளதா என்று பெரிதும் யோசிக்கவில்லை. நோக்கமெல்லாம் வசதி வாய்ப்பற்ற பள்ளி மாணவர்களை நிகில் நினைவாக வல்லமைப்படுத்துதல் வேண்டும், அப்படியே எங்கள் துக்கத்தையும் மடை மாற்ற வேண்டும் என்பது தான்.

உதவிகள் தேடி வந்தன. இன்று வரை 2,85,000 குழந்தைகளை வல்லமைப்படுத்தி உள்ளோம். ஏற்கனவே அவரவர் குணாதிசயத்தில், பேரார்வம் மற்றும் விடாமுயற்சி முக்கியம் என்று பார்த்தோம். அதை மறுபடியும் இங்கு வலியுறுத்துகின்றேன்.

ஆகக் கடைசி பெஞ்ச் மாணவர்களுக்குத் தேவை ஒரு தெளிவான நோக்கம், அதனை அடைவதற்கான விடுபடுதிசை வேகத்துடனான பேரார்வம் மற்றும் விடாமுயற்சி என்ற வெற்றிச் சூத்திரம் அவர்களை வெற்றிகரமான தொழில் முனைவராக மாற்றும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. (குறள் 513)

அன்பு, அறிவு, செயலாற்றும் திறமை, பேராசைப் படாத குணம்
ஆகிய நான்கு பண்புகளையும்
நிலையாகப் பெற்றிருப்பவரைத் தேர்வு செய்வதே நலம்.

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல். (குறள் 461)

எந்த அளவுக்கு நன்மை கிடைக்கும்
அல்லது தீமை ஏற்படும் என்று
விளைவுகளைக் கணக்குப் பார்த்த பிறகே
ஒரு செயலில் இறங்க வேண்டும்.

MAKE IN INDIA

startupindia

NICDC

NATIONAL INDUSTRIAL CORRIDOR DEVELOPMENT CORPORATION

India Reimagined




Digital India

Power To Empower

PM GatiShakti

National Master Plan for Multi-Modal Connectivity

# ８. தொழில் முனைவோருக்கான அரசின் திட்டங்கள்

தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க அரசு நிதி உதவி, காப்பீடு, மானியம், பயிற்சி, தொழில் தொடங்க ஆரம்ப நிலையில் தொழில் நுட்பம், வணிகக் கடன்கள், மற்றும் சிறப்பு ஊக்கம் போன்றவற்றை வழங்குகின்றது.

**1.ஸ்டார்ட் அப் இந்தியா (Start up India)**

தொடக்க நிலையில் உள்ள தொழில்களுக்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது, ஆதரவு அளிப்பது போன்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கின்றது. மேலும் நிதிகளின் நிதி என்ற நிதியின் மூலம் தொடக்க நிலை தொழில் வினைகளுக்கு நிதி வசதி செய்து தரப்பட்டு வருகின்றது

இணையதளத்தின் மூலம் பணப்பரிவர்த்தனை செய்பவர்களுக்கு பில் டெஸ்க் நிறுவனத்தைத் தெரியும். ஸ்டார்ட் அப் இந்தியா முயற்சியில் விளைந்த நிறுவனம் அது.

**2. இந்தியாவில் தயாரிப்பு திட்டம் (Make in India)**

இந்தியாவை ஒரு பன்னாட்டு உற்பத்தி மையமாக மாற்ற முயலும் திட்டம் இது. இதன் மூலம் உலகம் முழுவதும் உள்ள முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக அந்நிய முதலீடு, புதுமை புகுத்தல், திறன் வளர்ச்சி, அறிவுசார் சொத்துப் பாதுகாப்பு, உற்பத்தி, கட்டமைப்பு மேம்பாடு போன்ற வளர்ச்சி சார் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டு முழுவீச்சில் செயல்பட்டு வருகின்றது.

ஆயுதங்களை இதுவரை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்து வந்த நாம் இன்று ஒரு மிகப் பெரிய ஆயுத ஏற்றுமதியாளர். இந்தியாவின் தயாரிப்புத் திட்டத்தின் விளைவு இது.

**3. அட்டல் புதுமை புகுத்தல் திட்டம் (Atal innovation Mission0**

பன்னாட்டுத் தரத்திற்கு இணக்கமான முறையில் புதுமையான பொருட்களை வடிவமைப்பது மற்றும் தொழில் முனைவை முழுவீச்சில் ஊக்குவித்து, அதனை வளர்ப்பது என்பது தான், இதன் முதன்மையான நோக்கம். தொழில்நுட்பம் அறியப் பெற்ற திட்டங்களுக்கு இதன் மூலம் முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

**4. பெண்களுக்குப் பயிற்சி, மற்றும் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான ஆதரவு (Support to training and development programmes for women - STEP)**

ஊரகப் பகுதியில் உள்ள மகளிர்க்கு முறைசார் பயிற்சியை நல்கும் நோக்குடன் மகளிர் மற்றும் சிறார் வளர்ச்சிக்கான அமைச்சகம் இத்திட்டத்தைச் செயல்படுத்துகின்றது. இத்திட்டத்தின் மூலம் வேளாண்துறை, பழ வேளாண்மை, உணவு பதப்படுத்தல், சுற்றுலா, பாரம்பரியக் கைவினைக் கலைகள், விருந்தோம்பல், கணினி, மற்றும் தகவல் தொடர்புத்துறை போன்று துறைகளில் துவங்கப்படும் மகளிர் தொழில் முனைவோருக்குப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

**5. ஜன்தன் ஆதார் மொபைல் (Jan Dhan AAdhar Mobile)**

அரசுத் துறைத் திட்டங்கள் மூலம் பயனடையும் பயனாளிகளுக்குச் சேர வேண்டிய மானியத்தைச் சம்பந்தப்பட்ட துறை நேரடியாக அவர்களுக்கு வழங்கும் நோக்கத்தில் அவர்களின் வங்கிக் கணக்கு, ஆதார், அலைபேசி எண் மூன்றையும் இணைத்து வெற்றிகரமாகப் பயனாளிகளுக்குப் பணத்தை நேரடியாகச் செலுத்துகின்றது.

**6. டிஜிட்டல் இந்தியா (Digital India)**

இத்திட்டத்தின் மூலம் அனைத்து அரசின் சேவைகளும் பயனாளிகளுக்கு மின்னணு முறையில் வழங்கப்பட்டு வருகின்றது. உலகெங்கும் கிடைக்கும் பொருட்கள், மற்றும் பணிகளை மக்கள் மின்னணு முறையில் பெற வகை செய்திடும் அறிவுசார் பொருளாதாரமாக இந்தியப் பொருளாதாரம் இதனால் மாறி வருகின்றது.

### 7. ஸ்டாண்ட் அப் இந்தியா (Stand-Up India)

*இத்திட்டத்தின் மூலம் பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட )இனத்தைச் சார்ந்த மகளிர்க்கு நிறுமக் கடன் வழங்கி அவர்களும் வளர்ந்து வரும் இந்தியப் பொருளாதாரத்தின் பலனைப் பெற்று அனுபவிக்க வகை செய்யும் நோக்கத்தோடு வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*இத்திட்டத்தின் கீழ் துவங்கப்படும் உற்பத்தி, சேவை, மற்றும் வியாபார வினைகளுக்கு ரூபாய் 10 லட்சம் முதல் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு ஒவ்வொரு மகளிர் தொழில் முனைவோருக்கும் கடன் தரப்படுகின்றது.*

### 8. வணிகம் சார்ந்த தொழில் முறை உதவி மற்றும் வளர்ச்சித் திட்டம் (Tardes and Industry related Financial support Services - TIRFSS)

*அரசுசாரா அமைப்புகளில் பதிவு செய்து கொண்ட நலிவுற்ற மகளிர்க்குக் கடன் தரும் உன்னதமான திட்டம் இது. இதில் கடன் உதவி மட்டுமன்றிப் பயிற்சி ஆலோசனையும் பெற முடியும்.*

### 9. பிரதான் மந்திரி குஷால் விகாஸ் திட்டம் (Pradhan Mandri Kaushal Vikas Yojana)

*இத்திட்டத்தின் கீழ் தேசியத் திறன் வளர்ச்சி மற்றும் தொழில்துறை அச்சகம் தொழில் சார்ந்த திறமை, ஆற்றல் மற்றும் திறனை மேம்படுத்தப் பயிற்சி அளிக்கின்றது.*

### 10. தேசியத் திறன் அபிவிருத்திக் குறிக்கோள் (National Skill Development Mission)

*இத்திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்குத் தொழில் சார்ந்த ஆற்றல்களில் பயிற்சி தரப்படுவதுடன், உடனடியாக, மற்றும் தரமான முடிவுகளை எடுக்கப் பயிற்சி தரப்படுகின்றது.*

*தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்த மேலே கண்ட திட்டங்கள் மட்டுமல்லாது மேலும் பல திட்டங்களை அரசு அமல்படுத்தி வருகின்றது என்பது ஓர் ஆரோக்கியமான செய்தி.*



# ௯. தொழில் முனைவோர்கள் பார்வையில்

இந்தக் கையேட்டின் மதிப்பைக் கூட்டும் விதமாக எனது மனதில் தோன்றிய பின்வரும் கேள்விகளைச் சில தொழில் அதிபர்கள், தொழில் முனைவோர்களுக்கு, கல்வியாளருக்கு அனுப்பிப் பதில்களைப் பெற்றுள்ளேன். அவர்களின் கண்ணோட்டங்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

**கேள்விகள்**

1. தொழில் முனைவு பற்றிய உங்கள் கருத்து
2. 70% குறு, சிறு நிறுவனங்கள் ஆரம்பித்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளேயே ஏன் காணாமல் போய்விடுகின்றன?
3. தொழில் முனைவும், நிச்சயமற்ற தன்மையும் ஒட்டிப் பிறந்த இரட்டையர்களா?
4. தொழில் முனைவோருக்குப் படைப்பாற்றல் திறன் மற்றும் மாற்றுச் சிந்தனை அவசியமா?
5. தொழில் முனைவோர் பின்பற்ற வேண்டிய அறங்கள்?
6. தொழில் முனைவோர் வளர்த்துக் கொள்ள வேண்டிய இலாவகங்கள் என்னென்ன?
7. தொழில் முனைவோர் வசம் இருக்க வேண்டிய குணாதிசயங்கள் எவையெவை?
8. தொழில் முனைவில் ஈடுபடுபவர்களுக்கு உங்கள் ஆலோசனை
9. தொழில் முனைவு பற்றிய உங்களின் ஒரு வரிச் செய்தி

ஒரு வெற்றிகரமான தொழில் அதிபரான உங்களின் பதில்கள் வளர் இளம் பருவத்தினருக்கு மிகவும் உபயோகமானதாக இருக்கும் என்று நான் நம்புகின்றேன்.

உங்கள் பதில்களை ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கும்

**சோம.நாகலிங்கம்** இ.வ.ப(ஓய்வு)



**திரு. சம்பத்**
Ruby Food Products

1. தொழில் முனைவோர் தான் விவசாயத்திற்கு அடுத்தபடியாக வேலை வாய்ப்பிற்கும், பொருள் உற்பத்திக்கும், அரசாங்க வருமானத்திற்கும் காரணமாக இருக்கின்றார்கள்

இதில் முக்கியமாகக் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் தான் 40 சதவீத வேலைவாய்ப்பையும், ஏற்றுமதியில் 45 சதவீதமும் ஜிடிபியில் 38 சதவீதமும் பங்களித்து ஓர் அரசாங்கத்திற்கு உதவியாகப், பக்கபலமாக இருக்கின்றார்கள்.

குறுந்தொழில் என்பது 1 கோடிக்கும் குறைவான மூலதனத்துடன் 5 கோடிக்குக் குறைவான விற்றுமுதலும் இருக்கும் நிறுவனம் ஆகும். சிறு தொழில் என்பது 10 கோடிக்குக் குறைவான மூலதனமும் 50 கோடிக்குக் குறைவான விற்றுமுதலும் இருக்கும் நிறுவனம் ஆகும். நடுத்தரத் தொழில் என்பது 50 கோடிக்குக் குறைவான முதலீடும் 250 கோடிக்குக் குறைவான விற்றுமுதலும் உள்ள நிறுவனம் ஆகும்.

2. தொழிலை வெற்றிகரமாக நடத்துவதற்கு மக்கள் விருப்பத்திற்கு ஏற்பத் தரமாகவும், குறைந்த விலையிலும் பொருட்களைத் தயாரிப்பதற்கான திறமையும் இருக்க வேண்டும். அதைச் சந்தைப் படுத்துவதற்கான திறமை இருக்க வேண்டும்.

அதற்கான நிதியைத் திறமையாகக் கையாளக் கணக்கு வழக்குகள் மற்றும் நிதி நிர்வாகம் தெரிந்து இருக்க வேண்டும்.

மூலப் பொருட்களின் தரத்தைச் சரிபார்த்துக் குறைவான விலைக்கு வாங்கும் திறமை இருக்க வேண்டும். அதை நுகர்வோர்க்குக் குறைந்த செலவில் கொண்டு சேர்க்கும் திறமை இருக்க வேண்டும்.

இவை அனைத்திற்கும் திறமையான ஆட்களைப் பெரிய நிறுவனங்கள் வைத்திருப்பார்கள்.

பொதுவாகச் சிறு தொழில் ஆரம்பிப்பவர்கள் பொருள் தயாரிப்பதிலோ, அல்லது சந்தைப்படுத்துவதிலோ பெற்ற அனுபவத்தில் தொழிலை ஆரம்பித்து இருப்பார்கள். அனைத்துத் துறைகளிலும் திறமை இருக்கும் வாய்ப்புக் குறைவு. சிறு தொழில் நிறுவனங்களில் ஒவ்வொரு துறைக்கும் தனியான டிபார்ட்மென்ட் இருப்பதில்லை. அனைத்தையும் சிறு தொழில் முனைவோர்களே கவனிக்க வேண்டிய தேவை இருப்பதால் அநேக சிறு தொழில் நிறுவனங்கள் ஆரம்பித்த சில வருடங்களிலேயே தோல்வியைச் சந்திக்கின்றன.

3. தொழிலில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாற்றங்களுக்கு ஏற்றார்போல் தொழில் முனைவோர்கள் தங்களை மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். உதாரணத்திற்கு நீண்ட காலமாகத் தயாரிக்கும் பொருளைக் காலத்திற்கு ஏற்ப மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். அதற்கு மாற்றுப் பொருள் குறைவாக மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரலாம். அரசாங்கத்தின் பாலிஸி மாறலாம். மக்களின் முன்னுரிமைகள் மாறலாம். அனைத்து மாற்றங்களையும் உன்னிப்பாகக் கவனித்து தொழில் முனைவோர்கள் தங்கள் பொருள்களைக் காலத்திற்கேற்ப மாற்றங்கள் செய்யும் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதில் பிரச்சனை ஏற்படும் பொழுது, தொழில் வீழ்ச்சியை அடைகின்றது. எப்படி டாக்டர்கள் புதிதாகக் கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பத்திற்கேற்பத் தங்களுடைய திறமையை வளர்த்துக் கொள்ளும் தேவை இருக்கின்றதோ அதுபோல் தொழில் முனைவோர்களும் காலத்திற்கேற்பத் தங்கள் திறமையை வளர்த்துக் கொள்ளும் தேவை இருக்கின்றது.

4. தொழில் முனைவோர்க்குப் படைப்பாற்றல் திறன் மற்றும் மாற்றுச் சிந்தனை அவசியம். படைப்பாற்றல் இருந்தால் தான் புதிது புதிதாக மற்ற போட்டியாளர்களை விடப் பொருட்களில், வாடிக்கையாளர்கள் தேவை அறிந்து மாற்றம் செய்ய முடியும். மாற்றுச் சிந்தனையால் தான் வாடிக்கையாளரின் தேவைகளை அவர்களே சிந்திக்காத திசையில் சிந்தனை செய்து அவர்களின் வருங்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். இது அனைத்துத் தொழில் முனைவோர்களுக்கும் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. மாற்றுச் சிந்தனை உள்ளவர்களை அருகில் வைத்துக் கொள்வதன் மூலம் போட்டியாளர்களை விட ஓர் அடி முன்னே இருக்கலாம்.

5. தொழில் முனைவோர்கள் வாடிக்கையாளர்களின் ஏதோ ஒரு தேவையைப் பூர்த்தி செய்யத் தான் பொருட்களைத் தயாரிக்கின்றார்கள். வாடிக்கையாளர்களும் அவர்களின் பணத்தின் மதிப்பை விடப் பொருட்கள் உயர்ந்ததாக இருந்தால் தான் வாங்குவார்கள். வாடிக்கையாளர்கள் தான் நம் முன்னேற்றத்திற்குக் காரணம். அவர்களைத் தக்க வைத்துக் கொள்வதுதான் நம் வருங்கால வளர்ச்சியை உறுதி செய்யும் என்பதை மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

காந்தி அவர்கள் 1890ல் கூறியதைப் போல வாடிக்கையாளர்கள் நமது நிறுவனத்திற்கு விஜயம் செய்யும் முக்கியமான நபர்கள். அவர்கள் நம்மைச் சார்ந்து இல்லை, நாம் தான் அவரைச் சார்ந்திருக்கின்றோம். அவர்கள் தான் நம் தொழிலுக்கு ஆதாரம். இதை மனதில் வைத்து நேர்மையாக வணிகம் செய்ய வேண்டும்.


6. தொழில் முனைவோர் தங்களை விடத் திறமையானவர்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் கேட்கும் ஊதியம் அதிகமாக இருந்தாலும் பரவாயில்லை. அவர்களிடம் நம் நிறுவனத்தின் இலட்சியத்தை அடையும் பொறுப்பைக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு முழுச் சுதந்திரம் கொடுத்து அவர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் நோக்கம் சரியாக இருந்து முயற்சி தோல்வியில் முடிந்தாலும் அவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டும். நம்மைப் போன்று சிந்தனை

செய்பவர்கள் எத்தனை பேர் நம் நிறுவனத்தில் இருக்கின்றார்கள் என்பதைப் பொறுத்துத் தான் நம் நிறுவனத்தின் வளர்ச்சி அமையும்.

7. நிறுவனத்தில் உள்ள மனிதர்களை நம்ப வேண்டும். அவர்களிடம் ஒரு பணியைக் கொடுத்தால் அதைச் செயல்படுத்துவதற்கான கால அவகாசம் கொடுக்க வேண்டும். தொழிலில் வெற்றி பெற நம்மிடம் நேர்மறையான எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

8. புதுத் தொழில்நுட்பம், அது தயாரிப்பாக இருந்தாலும் சரி மார்கெட்டிங்காக இருந்தாலும் சரி பொருளாதார வசதி எந்த அளவிற்கு இடம் கொடுக்கின்றதோ அந்த அளவிற்குத் தொழில் நுட்பத்தில் இன்வெஸ்ட் செய்ய வேண்டும்.

9. மாறிவரும் நுகர்வோரின் தேவையை மனதில் வைத்துத் தயாரிக்கும் பொருள், நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்கின்றதா என்பதைத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்ய வேண்டும்.



E. ***பெருமாள் சாமி,***
*தலைமை செயலாக்க அதிகாரி,*
*செல்வரேணுகா மேட்ச் ஒர்க்ஸ்,*
*சாத்தூர்*

1. வயதில் வளர்வது போல், பருவ மாற்றங்கள் ஏற்படுவது போல், அவரவர் எதிர்கால வாழ்க்கை ஆதாரத்தை வடிவமைத்துக் கொள்ள ஒவ்வொருவருக்கும், அவரவர்க்கு ஏற்றார் போல் தொழில்முனைவு என்பது அனைவருக்கும் அவசியமே.

சிலருக்குத் தொழிலிலும், சிலருக்குக் கல்வி, விளையாட்டு, கலை போன்றவற்றிலும் தங்கள் விருப்பம் போலும், தத்தம் சூழ்நிலைகளுக்கு ஏற்றார் போலும் தொழில் முனைவு என்பது வேறுபடலாம்.

2. சிறு, குறு தொழிலோ, பெரிய அளவிலான தொழிலோ, குறுகிய காலத்தில் தோல்வியடைந்து விடுவது என்பது பல்வேறு

காரணங்களால் அமைகின்றன. தொழிலைப் பற்றிய போதிய அறிவும், அனுபவமும் இல்லாதது, ஒவ்வொரு தனிமனிதனுடைய வாழ்க்கைச் சூழல், பெற்றோர், மூத்தோர் வழிகாட்டுதல்கள் இல்லாமல் போவது, தனிமனிதனுடைய தெளிவான சிந்தனை, நோக்கம், ஆர்வம், முயற்சியின்மை என்பவையும் முக்கிய காரணங்களாகும்.

3. தொழிலில் நிச்சயமற்ற தன்மை என்பது உலகம் முழுவதும் ஏற்பட்டு வருகின்ற விரைவான மாற்றங்களால், ஒரு தொழிலைத் திட்டமிட்டுத் தொடங்கிச் சந்தைக்கு வரும் பொழுது அந்தப் பொருள் காலாவதியாகிவிடுகின்ற அபாயம் உள்ளது.

4. தொழில் முனைவோரிடம் படைப்பாற்றல் திறன் மற்றும் மாற்றுச் சிந்தனை மிகவும் அவசியம். சிறு தோல்வி அல்லது தோல்விகள் ஏற்பட்டால் துவண்டுவிடாமல் மாற்று யோசனைகளைத் தேடல் வேண்டும்.

5. தொழிலானாலும், வாழ்வானாலும், அடிப்படை அறங்கள் கட்டாயம் பேணுதல் வேண்டும்.

6. இலாபம் ஒன்றே குறிக்கோளாகயில்லாமல், நன்மதிப்பு ஈட்டுதல், ஒவ்வொருவருக்கும் முக்கியமாகும். தொழிலாளர் நலன், நமது பொருட்களை உபயோகிப்பவர்களின் நலன், தொடர்ந்த ஆதரவு மிக முக்கியமானதாகும்.

7. நேர்மையான எண்ணங்கள், தொழிலின் மேல் பக்தி, நமக்கு மூலப் பொருட்கள் வழங்குபவர்கள், நமது பொருட்களை வாங்கி வியாபாரம் செபவர்கள், உபயோகிப்பவர்கள், என அனைவரையும் மதித்து நேர்மை தவறாமல் நடந்து கொள்ள வேண்டும்

8. தினமும் தொடர்ந்து அதிகாலை 06.00 மணிக்கு முன் எழுந்து செயல்பட வேண்டும்.

9. உண்மை! உழைப்பு! நேர்மை! வெற்றி!



*அஸ்வத் பாபு*
துறைத் தலைவர்
முதுகலை வணிக நிர்வாகம்
சௌராஷ்டிரா கல்லூரி,
மதுரை

1. சுதந்திரம், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நல்லது, எச்சரிக்கையுடன் நுழையுங்கள்.

2. தவறான மதிப்பீடுகள், தவறான நிர்வாகம், ஆழம் தெரியாமல் அடியெடுத்து வைப்பது

3. அவசியம் இல்லை

4. அவசியம் இல்லை

5. தைரியம், நேர்மை, அர்ப்பணிப்பு, உதவும் மனம்

6. அனைத்துத் திறன்களையும் வளர்த்துக் கொள்ளுங்கள்

7. தைரியம், நேர்மை, அர்ப்பணிப்பு, ஆர்வம், முறையான அணுகுமுறை

8. நுழைவதற்கு முன் செய்ய வேண்டியவை

ஆராய்ச்சி செய், அன்றாட வாழ்க்கைக்குப் போதுமான நிதியைப் பராமரிக்க வேண்டும்.

சிறியதாகத் தொடங்கி பெரிதாக வளருங்கள்

தெரியாத துறையில் நுழைய வேண்டாம்

சரியான நபர்களை நியமிக்கவும்

9. கணக்கிடப்பட்ட 'ஆபத்து' (calculated risk) எப்பொழுதும் வெற்றி பெறும்.



***அஜய் கார்த்திக் ராஜா,***
*தலைமை செயலாக்க அதிகாரி,*
*இராமஜெயம்,*
*தேனி*

*கீழ்க் கண்ட சூழல்களால் ஒருவர் தொழில் முனைவோர் ஆகின்றார்.*

*1. பரம்பரையாக வரும் வாய்ப்பு*

*2. ஒரு வலுவான சாதனை மனோபாவம்*

*3. இதற்கு முன் பார்த்த வேலையிலிருந்து கிடைத்த அனுபவம் மேலும் அதுமூலம் கிடைத்த தொழில் ஞானம்.*

*4. பட்ட அவமானம், சிறுமை மற்றும் தூண்டல்*

*தொழில் முனைவு மற்றும் அதற்கான லாபங்கள் என்பது ஒரு கட்டமைப்பு அல்ல, கொஞ்சம் கொஞ்சமாக உள்ளிருந்து மற்றும் வெளியில் இருந்து வரும் காரணிகளால் உருவாகின்றன. சில சமயங்களில் மிகச் சிறந்த தொழில்நுட்பத் திறன் ஒரு தொழில் முனைவோரின் பலவீனமாக மாறுகின்றது. சில சமயங்களில் மோசமான தொழில்நுட்பத் திறன் கூட ஒருவருடைய பொருளை விற்பதற்கும் அவர் வெற்றி பெறுவதற்கும் காரணமாக அமைந்து விடுகின்றது.*

*இதுபோலவே பல வகையான திறன்களின் சரியான சேர்க்கையும் சரியான மனோபவமும் ஒருவரை வெற்றிகரமான தொழில் முனைவோராக மாற்றுகின்றது. தொழில் முனைவு என்பது ஒரு டெக்கத்லான் விளையாட்டுப் போல. நீங்கள் ஓட வேண்டி இருக்கும், தாவ வேண்டி இருக்கும், தடைகள் தாண்ட வேண்டி இருக்கும். ஒவ்வொரு நிகழ்வையும் எதிர்கொள்ள ஒவ்வொருவிதமான உடல் மற்றும் மனத் தகுதி தேவைப்படும். எதிர்பாராத தடைகளையும் தாண்டி வெற்றிக்கோட்டை அடைந்திட அவை உதவும்.*

ஒரு வணிகம் இரண்டு வருடங்களில் தோற்கலாம் அல்லது 100 வருடங்கள் கழித்துத் தோற்கலாம். இதற்குக் காரணம், தொழில் முனைவு என்பது டெக்கத்லான் விளையாட்டுப் போல என்பது தான்.

பரம்பரையாக வரும் தொழில் எப்பொழுதும் போலவே வெற்றியைத் தரும், அதற்குக் காரணம் தமது குடும்பமே என்று எண்ணிக் கொண்டு தொழில்முறை அணுகுமுறை இல்லாமல் மேலும், வெளியிலிருந்து வரும் காரணிகளைக் கவனிக்காதது தான். அதுபோல முதல் துறை தொழில்முனைவோர் சில சமயங்களில் நிதி நிர்வாகத்திலும், சந்தைப் படுத்துதலிலும் நிறுவனத்தை நடத்துவதிலும் தங்களைச் சரிவரத் தயார்ப்படுத்திக் கொள்ளாமல் இருந்து விடுகின்றார்கள்.

இரண்டு நிலைகளிலுமே நாம் தேவையான இடங்களில் உதவி கேட்பதோ அல்லது நமக்குப் பலவீனமான இடங்களில் வேலைகளைப் பகிர்ந்தளிப்பதோ கிடையாது. அது தோல்விக்கு வழி வகுத்து விடுகின்றது.

டெக்கத்லான் விளையாட்டு வீரர் தனது முயற்சியில் தனியாகத் தான் போராட வேண்டி இருக்கும். அனைத்து லாவகங்களையும் அவர் ஒருவரே கற்றுக் கொள்ள வேண்டி இருக்கும். ஆனால் தொழில் முனைவு அப்படி அல்ல. நாம் பிறரிடம் ஆலோசனை கேட்கலாம், உதவி கேட்கலாம் அல்லது வேறு ஒருவரை நாம் செய்ய வேண்டிய பணியைச் செய்ய வைக்கலாம். பாதியில் லாபகரமான தொழிலில் இருந்து விலகிக் கொள்ளவும் செய்யலாம்.

ஒரு தொழில் முனைவோருக்கான குணாதிசயங்கள் என்னென்ன வேண்டும் என்பதற்கான தெளிவான பட்டியல் ஏதுமில்லை.

மேலைநாட்டு வணிக மாடல் ஒரு குறிப்பிட்ட திறனுக்காக ஒருவரை வேலைக்கு அமர்த்துகின்றது. அதில் ஏதேனும் குறை இருந்தால் அவர் வேலையை விட்டு அனுப்பப்படுகின்றார் அல்லது அந்த குறிப்பிட்ட திறன் அந்தக் கம்பெனிக்குத் தேவை இல்லை என்றாலும் அவர் வெளியில் அனுப்பப் படுகின்றார்.

ஒரு தொழில் முறை வித்தகர் தனது தொழிலுக்கு நம்பிக்கையுடன் இருந்தால் போதும் அந்த நிறுவனத்திற்கு அல்ல.

கீழை நாட்டு வணிக மாடல்கள் ஒரு மனிதனை அவன் வேலை பார்க்கும் வயது வரை பணியில் அமர்த்திக் கொள்கின்றது. இரண்டு மாடல்களிலுமே ஒரு தொழில்முனைவோரிடம் எதிர்பார்க்கப்படும் தலைமைப் பண்புகள் வெவ்வேறு துருவங்களைச் சார்ந்தன.

ஆனால் முக்கியமான ஒரு குணாதிசயமாகக் கருதப்படுவது என்னவென்றால் சூழலுக்கேற்றவாறு தன்னை மாற்றிக் கொள்வது, கற்றுக் கொள்வது, தேவைக்கேற்றவாறு தன்னை உருவாக்கிக் கொள்வது போன்றன தான் வெற்றியைப் பெற்றுத் தருகின்றது.

வணிகத்தின் ஒவ்வொரு செயல்பாட்டிற்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொள்வதும், புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வதும் ஏற்கனவே கற்றிருந்த விஷயங்களை அகற்றுவதும், ஒருவரைக் கண்டிப்பாக வெற்றியாளனாக மாற்றும்.

வெற்றி என்பது ஒவ்வொரு தொழில்முனைவோருக்கும் மாறக்கூடியது.

அரவிந்த் மருத்துவமனை சமுதாயச் சந்தைப்படுத்துதலில் உள்ள நிறுவனம். அதாவது ஓராண்டிற்கு ஒரு மில்லியன் மனிதர்களுக்கு இலவசமாகச் சிகிச்சை அளிப்பது என்பதைத் தான் அது வெற்றியாகக் கருதுகின்றது. எவ்வளவு லாபம் வருகின்றது என்பது இங்கு முக்கியமல்ல. கட்டண சிகிச்சை பெறும் நோயாளிகளிடமிருந்து வரும் லாபம் இந்த ஒரு மில்லியன் மனிதர்களுக்கு இலவசமாகச் சிகிச்சை அளிக்க முடிந்தால் அதுவே போதும்.

இன்று வெற்றியானது ஒரு நிறுவனர் நிறுவனத்தை விட்டு வெளிவரும் பொழுது எத்தனை மில்லியன்கள் சம்பாதித்தார் என்பதைப் பொறுத்துத் தான். தெருவோரக் கடைக்காரருக்கு அன்றைய ஸ்டாக் விற்றுத் தீர்ந்து விட்டால் அதுவே வெற்றி. மேலும் அவர் ஆசையே தன் கடை ஒரு கட்டிடத்தில் இயங்க வேண்டும் என்பது தான். அவரிடம் உள்ள திறன்கள், மற்றும் வரக் கூடிய லாபங்கள் அதற்குப் பிறகு மாற்றிக் கொள்ளப்பட வேண்டும்.

மொத்தத்தில் தேவை ஓர் உறுதியான மனத் திட்பம். பணம், சந்தைப் பங்கீடு, ஒரு சமுதாயத் தேவை அல்லது அவரின் தேவையை அடைவதற்கான உறுதியான மனத் திட்பம்.

ஒரு தொழில்முனைவோர் ஒவ்வொரு கட்டத்திலும் அதாவது வெற்றி அடைந்தாலும், தோல்வி அடைந்தாலும் நிறுவனத்தை விட்டு வெளியே செல்லும் பொழுதும், வெளியே சென்ற பிறகும் தன்னை மகிழ்ச்சியாக வைப்பதற்கான திட்டமிடல் அவசியம்.

---



**திரு சங்கர்**
தலைமை செயலாக்க அதிகாரி,
சதுரகிரி மோட்டார்ஸ்,
தேனி

1. சுய முன்னேற்றத்திற்காகவும், நாட்டின் வளர்ச்சிக்காகவும் ஒரு கருத்து அல்லது யோசனையை லாபகரமான தொழிலாக உருவாக்கி, வளர்த்தெடுப்பது தொழில் முனைவு ஆகும்.

2. மோசமான நிதி நிர்வாகம், பலவீனமான சந்தைப் படுத்தல், மோசமான அல்லது உபயோகம் இல்லாத பொருள், சரக்கு, வெளிப்படைத் தன்மை குறைவு, சரியான மனிதர்களை வேலைக்குச் சேர்க்காதது, மோசமான இட அமைப்பு, மற்றும் மாறி வரும் சூழல்களுக்குத் தங்களை மாற்றிக் கொள்ளாத தன்மை போன்றவற்றால் சிறு, குறு நிறுவனங்கள் தோல்வியடைகின்றன.

3. நிச்சயமற்ற தன்மையை வணிகத்தில் தவிர்க்க முடியாது. புதிய தொழில்நுட்பம், மாறிவரும் வாடிக்கையாளர் மனோபாவங்கள், இயற்கைப் பேரிடர், மேலும் பொருளாதார நெருக்கடி போன்றவைகள் இதற்கான காரணிகளாக இருக்கும். இதுபோன்ற நிச்சயமற்ற தன்மையைச் சமாளிக்க ஆபத்து நிர்வாகம், சரிவரத் திட்டமிடல், மற்றும் செயல்படுத்துதல் தேவைப்படும்.

4. படைப்பாற்றல், புதுமை, மாற்றி யோசித்தல் போன்றவை தொழில் முனைவோர் வெற்றி பெற மிக முக்கிய காரணிகளாக அமைகின்றன. அவை தொழில் முனைவோரை மற்றவர்களிடமிருந்து பிரித்துக் காண்பிக்கின்றது, சந்தை மாற்றங்களை எதிர்கொள்ள

வைக்கின்றது. புதுமையான தீர்வுகளால் வணிகத்தை வளர்ச்சிப் பாதைக்கு எடுத்துச் செல்கின்றது.

5. தொழில் முனைவின் அறம் சார்ந்த கொள்கைகள் என்பது பொறுப்பு, அக்கறை, மரியாதை, நேர்மை, ஆரோக்கியமான போட்டி, விசுவாசம், வாக்குறுதியைக் காப்பாற்றுதல், சட்டத்தை மதித்தல் போன்றன ஆகும்.

6. ஒரு தொழில்முனைவோர் கண்டிப்பாகச் செய்ய வேண்டிய விஷயங்கள் பின்வருவன

- வாய்ப்புகளைக் கண்டறிதல்
- திட்டமிடல் மற்றும் நிர்வாகத்தைச் சரிவர நடத்துதல்
- ஆபத்துக்களை நிர்வகித்தல்
- புதுமையை வளர்த்தெடுத்தல்
- நிதி நிர்வாகம்
- சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை
- அணிகளை வழி நடத்தல்
- வியாபார வலைப் பின்னலைக் கட்டமைத்தல்
- சந்தை மாற்றங்களைத் தழுவிக் கொள்ளல்.

7. ஒரு தொழில் முனைவோருக்கான இலாவகங்கள் பின்வருமாறு

- கடின உழைப்பு
- தொலைநோக்கு
- முடிவெடுக்கும் தன்மை
- புதுமை
- பெரிய சாதனைக்கான ஆசை
- நேர்மறை மனோபாவம்
- நல்ல ஏற்பாட்டாளர்
- பொறுமை
- தொடர்பாற்றல் இலாவகங்கள்
- அணி மனோபாவம் மற்றும்
- உணர்வுகள் மேலாண்மை

8. தொழில் முனைவோர்களின் வாணிபத்திற்கான அர்ப்பணிப்பு உணர்வு, மற்றும் தொழில், குடும்பத்திற்கான சமச்சீரான வாழ்க்கை வாழ்வது நலம் பயக்கும்.

*9. தொழில் முனைவு என்பது வாடிக்கையாளர் நிலையில் தன்னை வைத்துப் பார்ப்பது, மேலும் திருப்தியுறாத வாடிக்கையாளர்கள் தான், கற்றுக்கொள்வதற்கான மிகச் சிறந்த ஆதாரமாக இருப்பர் என்பதைப் புரிந்து கொள்வது.*

---


ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல். (குறள் 472)

ஒரு செயலில் ஈ.டுபடும்போது
அச்செயலைப் பற்றிய அனைத்தையும்
ஆராய்ந்தறிந்து முயற்சி மேற்கொண்டால்
முடியாதது எதுவுமில்லை.

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. (குறள் 659)

பிறர் அழத் திரட்டிய செல்வம் அழ அழப் போய்விடும்
நல்வழியில் வந்த செல்வமென்றால்
அதனை இழந்தாலும் மீண்டும் வந்து பயன் தரும்.

---


DREAM
THE
IMPOSSIBLE
DREAM.

# 10. நிறைவுரை

காலத்தே பயிர் செய் என்பர். அதுபோல நம் இளையவர்களுக்கு பணிசார் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகவும் தான் வேலை தேடாது நான்கு பேருக்கு வேலை தரும் நிலையை அடையவும் தொழில் முனைவு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை? அதன் முக்கியத்துவம் என்ன? தொழில் முனைவோர்களின் கண்ணோட்டம், தொழில் முனைவோர்களின் குணாதிசயங்கள், இலாவகங்கள் போன்றவைப் பற்றிய ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் முயற்சியே இந்தக் கையேடு.

பள்ளியில் போதிய மதிப்பெண்கள் பெற முடியவில்லை என்று இடிந்து போய்விடாமல் தொழில் தொடங்க இருக்கும் பல்வேறு வாய்ப்புகளை அவர்கள் தெரிந்து கொள்ளவும், இள வயதில் தொழில் முனைவோர்களாக மாறிய உதாரணங்களைத் தெரிந்து கொள்ளவும், அரசு தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்த, வளர்த்தெடுக்க என்ன மாதிரியான திட்டங்கள் வைத்துள்ளது, என்னவிதமான உதவிகள் செய்து தருகின்றது என்பது பற்றிய அறிவையும் அவர்கள் மனதில் பதிவு செய்யவும் அவர்களை உத்வேகப்படுத்திடவும் நான் முயன்றுள்ளேன்.

இந்தப் புத்தகத்தைப் படிப்பவர்கள், இது அளிக்கும் பயிற்சியைப் பெறுபவர்கள் நல்ல தொழில் முனைவோர்களாக மாறினால் அவர்களும் வளர்வார்கள், நாடும் வளரும் என்பதில் அளப்பரிய நம்பிக்கை எனக்குண்டு. இந்நாட்டு இளைஞர்கள் அனைத்து வளங்களும் பெற்று சீருடனும் சிறப்புடனும் வாழ மனதார வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

## ஆசிரியரைப் பற்றி...

அருப்புக்கோட்டை நகரைச் சார்ந்த இவர் கணிதத்திலும், சட்டத்திலும் இளங்கலைப் பட்டங்களும் சமூகவியலிலும், வியாபார நிர்வாகத்திலும்,உளவியலிலும் முதுகலைப் பட்டங்களும் பெற்றுள்ளார். சுங்கம் மற்றும் கலால் துறையில் ஆய்வாளராகச் சேர்ந்த இவர் கண்காணிப்பாளராகவும், அதன் பின் உதவி ஆணையராகவும் சீரிய பணியாற்றி இந்திய வருவாய்த் துறை அதிகாரியாக (IRS) ஓய்வு பெற்றவர். ஜுனியர் சேம்பர் இயக்கத்தில் 1993–ஆம் ஆண்டு தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்டு கிளை இயக்க அளவிலும், மண்டல அளவிலும், தேசிய அளவிலும் தான் ஏற்ற பணிகளை செவ்வனே பணியாற்றியவர்.

இன்று ஒரு தலை சிறந்த பயிற்சியாளராகவும் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். சர்வதேச ஜுனியர் சேம்பர் பல்கலைக் கழகத்தின் சான்றிதழ் பெற்ற துணை பிரைம் பயிற்சியாளர், எக்ஸல், மற்றும் தேசியப் பயிற்சியாளர். மண்டல அளவில் தலை சிறந்த பயிற்சியாளராக 10 முறைகளுக்கு மேல் விருது பெற்ற இவர் தேசிய அளவிலும் இந்தியன் ஜுனியர் சேம்பரின் தலை சிறந்த பயிற்சியாளர் என்ற விருதை ஒரு முறை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. பயிற்சிக் கையேடுகளை வடிவமைப்பதில் தனக்கென ஒரு பாணியை வைத்துக் கொண்டு இது வரை தாய் தமிழில் 11 பயிற்சிக் கையேடுகளும், ஆங்கிலத்தில் 12 பயிற்சிக் கையேடுகளும் கருக்கொண்டு உருவாக்கியுள்ளார். வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்துறையின் பங்களிப்பாக இவர் எழுதிய ‘ஜுனியர் சேம்பர் ஓர் அறிமுகம்’ என்ற பயிற்சிக் கையேட்டினை JCI மண்டலங்கள் 18 மற்றும் 23 வெளியிட்டு பெருமைப் படுத்தின. இவர் வடிவமைத்த ‘ஜிஎஸ்டி ஓர் அறிமுகம்’ என்ற கையேட்டினை சென்னை கலால் மற்றும் சுங்கத் துறை மூன்றாம் ஆணையகமும், மதுரை கலால் மற்றும் சுங்கத் துறை ஆணையகமும் வெளியிட்டன. 'National Training Fellow' என்ற JCI இந்தியாவின் தலைசிறந்த அங்□காரத்தையும் பெற்றவர்.

மதுரை சுங்கம் மற்றும் கலால் துறைக் கமிஷ்னர் அலுவலகத்தின் அதிகாரப் பூர்வ ஏடான வைகை செய்தியில் 'An Officer with a Difference' என்ற பாராட்டினைப் பெற்றவர். ‘Professional Excellence' என்ற விருதினை மதுரை நடுநகரம் மற்றும் மேற்கு சுழற்சங்கங்கள் இவருக்கு வழங்கியுள்ளன.

2007ஆம் ஆண்டு ஒரு சாலை விபத்தில் தனது இளைய மகன் நிகிலேஸ்வரனை பறிகொடுத்த இவர் தனது சோகத்திற்கு மடைமாற்றாக அந்த மகனின் நினைவாக வசதி வாய்ப்பற்ற பள்ளி மாணவர்களுக்காக ஒரு நாள் இலவச வாழ்க்கைத் திறன் பயிற்சி நிகழ்ச்சிகளை இதுகாறும் 754 பள்ளிகளில் நடத்தி 2,85,000 மாணவர்களை வல்லமைப் படுத்தியுள்ள பெருமைக்குச் சொந்தக்காரர்.

நாக மலர்க்கொடி என்ற இல்லாளைக் கைத்தலம் பற்றியவர். சௌந்தர் மற்றும் நிகிலேஸ்வரன் என்ற இரண்டு ஆண் மகவுகளைப் பெற்றவர். ஜெயப்பிரிய ஹர்ஸினி என்ற மருமகள், அரசி என்ற பெயர்த்தி என்று இவர் குடும்பம் விரிவடைந்துள்ளது.



## Sri.N.A.Ramachandra Raja

1925 - 1992

Born at Rajapalayam to Sri. N.A.Annapparaja & Smt. N.A.Manjammal he had his basic education at ZKM High School. Bodinayakannur and St. Mary's High School Dindugul.

He lost his father at a tender age of 3, brought up by his mother and had his brother in law as his guardian. He entered business at the age of 16. His entrepreneurial journey included Cotton trading, Ginning and promoter of The Jankiram Mills Limited, Rajapalayam in 1942. He later founded Sri Padmavathi Cotton Mills, Sapthagiri Steels Limited amongst other business. He grew his businesses steadily making them one of the reputed textile mills in Tamilnadu.

He was known for his deep thought, sharp acumen with his soft voice and composed mind even at times of distress and volatile surroundings. He was looked upon for settling various issues amicably.

He always had a mind to give back to society, founded a school in memory of his father the N.A.Annaparaja memorial Hr Sec School, in memory of his mother Smt.N.A Manjamaal Elementary school & N.A.Manjamaal Polytechnic. He was a founding member of Rajapalayam Raju's College. All these institutions have grown creating stalwarts in various fields. He was the founding President of Vivekanada Kendra, Rajapalayam. The trusts founded by him held regular free camps for the differently abled.

N.A.R. as he was known has motivated many in business & society for which he is still revered and remembered.